உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௫] வெகுதானிய௵ புரட்டாசி௴ [பகுதி-௧௧.

Vol. 35. *September - October 1938.* No. 11.

ஹாஸ மகாகவி இயற்றிய

அபிஷேக நாடகம்.

௩௬௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.

நான்காவது அங்கம்.

வானரக்கஞ்சுகி.—(அரங்கிற்புகுந்து) ஓ! ஓ! வலாத்யக்ஷ! வானரப்படையை ஆயத்தமாயிருக்கச்செய்வாயாக.

வலாத்யக்ஷன்:—(அரங்கிற்புகுந்து) ஐய! இந்த முயற்சி எதற்காகச் செய்யப்படுகிறது.

கஞ்சுகி:—அநுமனால் ஆரியரான இராமபிரானுக்குச் சீதாதேவியின்செய்தி கொணரப்பெற்றது.

வலாத்:—என்னவென்று? என்னவென்று?

கஞ்சுகி:—கேட்பாயாக;

லங்காயாம் கில வர்த்ததே ந்ருபவதூ: ஸா ஶோகவிஹ்வலாஶயா

வைதேஹ்யா ந விஹாய யச்ச குஸுமம் ஸந்தேஶ்யோ நாதத:।

ஶ்ருத்வைதத்தைஹ்ய ஶோகதப்தநயநோ ராமஸ்ய காயார்த்திநா

ராஜ்ஞா வாநரவாஹிநீ த்ருதிமதா ஸந்நாஹமாஜ்ஞாபிதா ॥

தர்மத்தைவிட்டவனுன இராவணனுல், மிகவும் துன்புறுத்தப் பட்டவளாயும், துக்கமடைந்தவளாயும் அரசகுமாரி இலங்கையில் இருக்கிருள் என்பதைக்கேட்டு மிகவும் சோகத்தையும் தாபத்தை யும் அடைந்தவரான இராமபிரானுடைய காரியத்தைச் சாதிக்க விரும்பிய நம் அரசர் சுக்கிரீவரால் படையெடுத்துச்செல்லுவதற் காகச் சேனே ஆயத்தப்படுத்தப்பட்டது.

வலாத்:—இப்படியா? மகாராஜரின் உத்திரவுப்படி.

கஞ்சுகி:—வானரப்படை ஆயத்தமாயிருக்கிறதென்று மகா ராஜரிடம் தெரிவிப்பதற்கு நானும் செல்லுகிறேன்.

(இருவரும் வெளியேசெல்லுதல்)

விஷ்கம்பகம் முற்றும்.

(பிறகு இராமன் இலக்குமணன் சுக்கிரீவன் அநுமன் இவர்கள் அரங்கிற்புகுதல்.)

இராமன்:—

ஶைலா: ப்ராக்பாரநம்ரத்வஜகஹனா
ஜீமூதாபா: ப்ரவர்தா:
ஸிம்ஹவ்யாக்ர மதேப ப்ரபீதஸலிலா
நத்யஶ்ச தீர்ணா மயா ।
க்ராந்தம் புஷ்பபலாட்யபாதபயுதம்
விஸ்தீர்ணம் கஹனம் ச காநநம்
ஸம்ப்ராப்தோஸ்மி கபீந்த்ரஸைன்யஸஹிதோ
வேலாதடம் ஸாம்ப்ரதம் ॥

பெரியதாழ்வரைகளில் கொடிமாடங்கள் அடர்ந்து கார் போலும் மலைகளும் என்னுற் சுற்றிப்பார்க்கப்பட்டன; சிங்கம், புலி, மதயானே இவைகளால் பருகப்படுகிற தண்ணீருடன்கூடின ஆறுக ளும் என்னுல் கடக்கப்பட்டன; புஷ்பங்களும் பழங்களும் நிறைந்த மரங்களுடன் கூடின கானகங்களும் என்னுல் தாண்டப்பட்டன; இப்போது வானரப்படையுடன் நான் சமுத்திரக்கரையை அடைந் திருக்கிறேன்.

இலக்ஷ்மணன்:—

ஸஜலஜலதநீலோ நீலநீரோ

விதூதாத் தரங்க ஹாராம் ஹாராஃ।

ஸபுஜகநீலஸஹஸ்ரபாஹு:

ஹரிரிவ பாதி ஸரிதாம் பதிஃ ஸயாநஃ॥

இந்தப் பகவான் சமுத்திரராஜன், நீருண்ட மேகம்போல் நீல நிறமுள்ள நீருடனும், அசைகிற நுரைகளுடனும் கூடின அலைகளாகிய மாலைகளுடனும், தன்னுடன் கலக்கிறவைகளான ஆறுகளாகிய ஆயிரம் கைகளுடனும் பள்ளிகொண்டிருக்கிற திருமால் போல் விளங்குகிறார்.

இராமன்:--ஓ! எப்படி? எப்படி?

பிவாத்ருதோத்யுக்தம் மாயம் ஸத்ஸாயகம்।

ஸஜீவமிவ தம் க்ருத்தம் நிவாரயதி ஸாகரஃ॥

பகைவனைக் களையவேண்டுமென்ற முயற்சியுடன் வில்லைத் தாங்கி நான் வரும்போது அவனை உயிருடன் விட்டுவிட உதவி செய்வதுபோலக் கடல் என்னைத் தடுக்கிறதே.

சுக்கிரீவன்:—ஓ! ஆகாயத்தில்,

ஸஜலஜலதநீலஃ ப்ரகாஶஃ

கநககவசோஜ்ஜ்வலாங்கஃ।

ஜ்வலதி கதோ நு ராக்ஷஸோऽஸௌ

ஶலப இவாஶு ஹுதாஶநம் ப்ரவேஷ்டும்॥

நீருண்டமேகம்போன்ற காந்தியையும், ஒளிர்கின்ற பொன் னாபரணங்கள் அணிந்த அங்கங்களையும் உடைய அரக்கன் ஒருவன், நெருப்பில் விழுவதற்கு விரைந்து நெருங்குகிற விட்டிற் பூச்சியைப்போல் எங்கிருந்தோ எதிர்நோக்கி இறங்குகிறானே!

அநுமன்:—ஓ! ஓ! வானரவீரர்காள்! நீங்கள் கவனத்துடன் இருங்கள்.

ஶைலைர்த்ருமை: ஸம்ப்ரதி முஷ்டிபிஶ்ச
தந்தைர்நகைர்ஜாநுபிரூருகாதை: ।
ரக்ஷோவதாயாபி ச வாநரேந்த்ரா
ஸ்திஷ்டந்து ரக்ஷந்து ச நோ நரேந்த்ரம் ॥

இப்பொழுது மலைகளாலும், மரங்களாலும், கைக்குத்துக்களாலும், பற்களாலும், நகங்களாலும், முழங்கால்களாலும், உரக்க ஆரவாரித்தலாலும், அரக்கர்களைப் போரில் மாய்ப்பதற்காக வானரத்தலைவர்கள் ஆயத்தமாய் நிற்க; நம் அரசரையும் காக்க.

இராமன்:- அநுமானே! அரக்கர் என்று பரபரப்பு வேண்டா.

அநுமன்:—தேவரீர் ஆணைப்படி.

விபீஷணன்:—(பிறகு அரங்கிற்புகுந்து.) ஓ! இராகவனது படமாடத்தை அடைந்துவிட்டேன். (ஆலோசித்து) முன்னே தூதனை அனுப்பாமலும், வருவதைத் தெரிவிக்காமலும், திடீரென வந்தவனும் எதிரியைச்சார்ந்தவனுமான என்னை இராகவன் எப்படித் தெளிந்துகொள்ளுவார்?

க்ருத்தஸ்ய யஸ்ய புரத: ஸஹிதோப்யஶக்த:
ஸ்தாதும் ஸுரை: ஸமரஸீம்நி வஜ்ரபாணி: ।
தஸ்யாநுஜம் ரகுபதி: ஶரணாகதம் மாம்
கிம் வக்ஷ்யதீதி ஹ்ருதயம் பரிஶங்கிதம் மே ॥

வச்சிராயுதமுடைய தேவேந்திரனே தேவர்களுடன் வந்தாலும், வானவர்பகைவனை எவனுக்கு எதிர்நிற்கமாட்டானோ, அவனுடைய (இராவணனுடைய) தம்பியான நான் இராமனைச் சரண்புகும்போது,. அவர் என்ன சொல்லுவாரோ? என்று என் மனம் ஐயப்படுகிறதே.

த்ருஷ்டபூர்வாக்ருதிரயம் ஸாது: ஸம்ஶ்ரிதவத்ஸல: ।
ஶங்கநீய: கதம் ராமோ விஶ்வாஸஸ்தாநவஸா மயா ॥

தர்மத்தின் உண்மையறிந்தவரும், நல்லோரும், அடுத்தவர்களிடம் அன்புள்ளவரும் ஆக இராமபிரான் விளங்குகிறார்; சுத்தமான மனமுடைய அவரை எப்படி ஐயுறுவது. (கீழேநோக்கி)

இது ரகுகுலத்திற் சிறந்தவரான இராமபிரான் படமாடம். நான் இறங்குகிறேன். (இறங்கி) இங்கேயே நின்று அவருக்கு என் வரவைத் தெரிவிக்கிறேன்.

அநுமன்:—(மேலே பார்த்து) ஓ! பெரியோனான விபீஷணன்!

விபீஷணன்.— அநுமானா? என்வரவைத் தேவரிடம் தெரிவிப்பாயாக.

அநுமன்:—(நெருங்கிவந்து) நீர் வெற்றிபெறவேண்டும்; வெற்றி பெறவேண்டும்.

ராஜம்ஸ்த்வத்காரணாச்சைவ ப்ராத்ரா நிர்விஷயீக்ருத꞉ ।
விபீஷணோயம் தர்மாத்மா ஶரணாய த்வாமாகத꞉ ॥

அரசே! உம்மைச்சேர்ந்த காரணத்தாலேயே உடன்பிறந்தோனால் தள்ளப்பட்ட விபீஷணன் இவன்; தர்மாத்மாவான இவன் உம்மைச் சரணமடைய வந்திருக்கிறான்.

இராமன்:— விபீஷணன் சரணமடைகிறான் என்பது எப்படி? குழந்தாய்! இலக்குமணா! நீசென்று அவனை மரியாதையுடன் அழைத்துவா.

இலக்குமணன்:—ஆரியரின் ஆணைப்படி.

சுக்கிரீவன்:— தேவ! மிக்க மாயையுடைய அரக்கர்கள் கபடமாய்ப் போர்புரியக்கூடியவர்கள்; ஆதலால் ஆலோசித்து, விபீஷணனை அழைத்துவரச்சொல்லுங்கள்.

அநுமன்:—மகாராஜரே! அப்படி இல்லை இல்லை.

நைவ யதா வயம் ஹந்தும் ஶக்யாஸ்தேந விபீஷண꞉ ।
ப்ராத்ரா விவர்ஜிதோ நாஸௌ த்ருஷ்ட꞉ பர்யவஸ்யதே ததா ॥

உம்மிடத்தில் நாங்கள் எவ்விதம் அன்பர்களோ, அப்படியே விபீஷணனும் அன்பன் என்று எண்ணுகிறேன்; முன்பே அவன் இலங்கையில் தமையனுடன் வாதாடும்போது, அவனைக் கவனித்திருக்கிறேன்.

இராமன்:—அப்படியானால் விபீஷணனை மரியாதையுடன் அழைத்துவரவேண்டும்.

இலக்குமணன்:—ஆரியரின் ஆணைப்படி (சற்றுத்தூரம் சென்று) ஓ! விபீஷண! விபீஷண! சௌக்கியமா?

விபீஷணன்:—ஓ! குமாரர் இலக்குமணர்! இளவலே! இன்று சௌக்கியமடைந்தவனாக ஆனேன்.

இலக்குமணன்:—ஆரியரை அணுகுவீராக.

விபீஷணன்:—நல்லது.

(இருவரும் இராமனிடம் நெருங்குதல்)

இலக்குமணன்:—ஆரியர் வெல்க.

விபீஷணன்:—தேவரீர் கருணைபுரிக. தேவரீர் வென்றி பெறுக.

இராமன்:—ஓ! விபீஷணன்! விபீஷண! நீ சௌக்கியமா?

விபீஷணன்:—இன்று சேமமுள்ளவனாக ஆனேன்.

𑌭𑌵𑌨𑍍𑌤𑌂 𑌪𑌦𑍍𑌮𑌪𑌤𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌂 𑌶𑌰𑌣𑍍𑌯𑌂 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌃 ।
𑌅𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌮𑌿 𑌕𑍁𑌶𑌲𑍀 𑌰𑌾𑌜𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌵𑌿𑌕𑌲𑍍𑌮𑌷𑌃 ॥

அரசே! தாமரையிதழ்போன்ற கண்களையுடையவராயும் சரணமடையத் தகுந்தவராயுமுள்ள உம்மைச் சரண்புகுந்து பாவமற்றவனாய் இன்று சேமமுள்ளவனாக ஆனேன்.

இராமன்:—என்வசனத்தால் நீ இன்றுமுதல் இலங்கைக்கு அரசனாக ஆவாயாக.

விபீஷணன்:—அருள்புரியப்பெற்றேன்.

இராமன்:—விபீஷண! நீ வந்ததனாலேயே நமது காரியம் நிறைவேறிவிட்டது; கடலைக் கடக்க உபாயம் தெரியவில்லையே.

விபீஷணன்:—இதில் என்ன ஆலோசனை? வழிவிடாவிட்டால் சமுத்திரத்தின்மீது தேவரீர் தெய்வத்தன்மையுள்ள அஸ்திரத்தைத் தொடுக்கவேண்டியதுதான்.

இராமன்:—நல்லது, விபீஷண! நல்லது; இருக்கட்டும், இவ்வாறு செய்கிறேன் (பரபரப்புடன் எழுந்து, சினத்துடன்)

ஶரவரஶிகோக்ரதூபவேகம்
ஹதஸத்த்வவிகீர்ணமீநமாலம் ।
யதி மம ந ததாதி மார்கமேநம்
வ்யதிஹதவீசிரவம் கரோமி ஶீக்ரம் ॥

எனக்கு இக்கடல் வழிவிடாவிட்டால், இதை என்னுடைய பாணத்தினால் எரிக்கப்பட்ட நீருடனும் சேற்றுடனும் கொல்லப்பட்ட மீன்கள் சிதறிக்கிடக்கிற தரையுடனும் கூடியதாகவும் அலைகளின் அரவம் அடங்கியதாகவும் விரைந்து செய்வேன்.

வருணன்:—(பிறகு பரபரப்புடன் அரங்கிற் புகுந்து)

நாராயணஸ்ய நரதேவவபுர்தரஸ்ய
கார்யார்த்தமப்யுபகதஸ்ய க்ருதாபராத: ।
தேவஸ்ய தேவரிபுஸம்ஹரணாஶுகேந
பீத: ஶரண்யஶரணம் நநு யாமி ஶீக்ரம் ॥

மனித உருவமெடுத்தவரும் காரியத்தைக் குறித்து எழுந்தருளியிருப்பவருமான நாராயணனை உமக்குக் குற்றமிழைத்தவனை நான் தேவசத்ருவின் சரீரம் அழிவதற்குமுன்னமேயே' தேவர் அம்புக்கு அஞ்சி விரைவில் சரணம் அடைகிறேன்.

(உற்றுநோக்கி) ஓ! இந்தப்பகவான்,

மாநுஷம் ரூபமாஸ்தாய சக்ரஶார்ங்ககதாதர: ।
ஸ்வயம் காரணபூத:ஸந் கார்யார்த்தீ ஸமுபாகத: ॥

சக்கிராயுதம், சாரங்கமென்னும் வில், கதை: இவைகளைத் தரித்தவரான இவர் (எல்லாவற்றிற்கும்) காரணமாயிருந்தாலும், மானிட உருவமெடுத்துக் காரியத்தைமுன்னிட்டு இங்கே எழுந்தருளியிருக்கிறார்.

மூன்றுலகத்துக்கும் காரணமூர்த்தியான பகவான் நாராயணனை வணங்குகிறேன்.

இலக்குமணன்:—(பார்த்து) இவன் யார்?

ஊணிவிரஹிதமௌளிஷ்வாராதாஊாயதாக்ஷோ

நவகுவலயநீலொ உத்தஊதம்ஹஷீஷ:।

ஸலிலநிசயமத்யாதுத்திதஸ்ஸஷ ஸீவு

உவநதிவகுவல்லம்ஸஜஹா ஜீவலொகமு॥

அரதனங்களால் இழைக்கப்பட்ட கிரீடத்துடனும், சிவந்த அழகிய கண்களுடனும், புதிய நீலோற்பலம்போல் நீலநிறமுள்ள மேனியுடனும், மதயானைபோல் அழகிய நடையுடனும் நீர்நிலையின் நடுவிலிருந்து விரைந்தெழுந்து தன்னுடைய ஒளியால், உயிர்த்தொகுதியையே வணங்கச்செய்கிறான்போலும்.

விபீஷணன்:—பகவானான வருணன் எழுந்தருளியிருக்கிறார்.

இராமன்:—வருணனா இவர்? பகவானே! நமஸ்காரம்.

வருணன்:—தேவேசராகிய நீர் என்னை வணங்கல் தகாது.

ராஜபுத்ர! கூத: கொபொ ரொஷெண கிமும் தவ।

கதவ்யம் தாவகுஸாஹிவஷ ஸீவும் நரொாது॥

எ! புருஷோத்தமனான அரசகுமாரரே! என்மீது சினம் வேண்டாம். உமக்கு நான் என்னசெய்யவேண்டும்? விரைவிற் சொல்லுக.

இராமன்:—இலங்கை செல்வதற்கு நீர் வழிவிடவேண்டும்.

வருணன்:—இதோ வழி; நீங்கள் செல்லலாம். (மறைதல்)

இராமன்:—வருணபகவான் மறைந்துவிட்டாரா? விபீஷண! பார்! பார்! பகவானுடைய அருளால், அசைவற்ற அலைகளுடன் கூடிய கடலைக் காண்பாயாக.

விபீஷணன்:—இப்பொழுது கடல் இரண்டாகப் பிரிந்து விட்டதுபோல் காணப்படுகிறது.

இராமன்:—அநுமான் எங்கே?

அநுமன்:—தேவரீர் வெற்றியடைக.

இராமன்:—அநுமானே! முன் செல்வாயாக.

அநுமன்:—தேவரீர் கட்டளைப்படி.

(எல்லோரும் நடத்தல்)

இராமன்:—(நோக்கி வியப்புடன்) குழந்தாய்! இலக்குமண! சுக்கிரீவமகாராஜனே! தோழ! அநுமானே! நீங்கள் எல்லோரும் பாருங்கள்! பாருங்கள்! ஆச்சர்யம்! சமுத்திரத்தின் நிலைமை என்னே!

க்வசித் பேநோத்காரீ க்வசிதிவ மீநாகுலஜலஃ
க்வசித்வீசீசயஃ க்வசிதிவ நக்ரவ்ரஜபயஃ।
க்வசித்ஸம்வ்யாகீர்ணஃ க்வசிதிவ நீலாம்புதநிபஃ
க்வசித்ஹ்ராவர்தஃ க்வசிதிவ நிஷ்கம்பஸலிலஃ॥

ஓர் இடத்தில் நுரையைக் கக்குகிறதாயும், மற்றோரிடத்தில் மீன்களால் அசைக்கப்பட்ட நீரையுடையதாயும், வேறோரிடத்தில் சங்குகள் சிதறியிருப்பதாயும், பிறிதோரிடத்தில் கறுத்த முகில் போன்றதாயும், மேலும் ஓரிடத்தில் அலைகளின்வரிசைகளுடன் கூடியதாயும், மற்றுமோரிடத்தில் முதலைகளால் அச்சத்தைவிளைப்பதாயும், இன்னுமோரிடத்தில் ஆழமுள்ள சுழல்களையுடையதாயும், மறித்துமோரிடத்தில் அசைவற்ற தண்ணீருள்ளதாயும் சாகரம் விளங்குகிறது.

பகவானுடைய அருளால் ஆழி கடக்கப்பட்டது.

அநுமன்:—தேவ! இதுதான் இலங்கை.

இராமன்:—(வெகுநேரம் உற்றுநோக்கி) அரக்கநகரத்தின் அழகு சீக்கிரம் அழியப்போகிறதே!

88 ஶரவாதவாதஹ்ந

கபிவரஸைந்யதரங்கதாடிதாஹா।

உதயிஜலமகெதவ நௌவிலஙா

நிபததி ராவணகணபாபதோஷாத்॥

என்னுடைய பாணங்களாகிய காற்றால் தாக்கப்பட்டு முறிந்ததும், வானர சைனியமாகிய அலைகளால் மோதப்பட்டகூம்புள்ளதும், சாகரஜலத்தில் தத்தளிப்பதும் ஆக இலங்கையென்ற கப்பலானது இராவணனாகிய மாலுமியின்குற்றத்தால் மூழ்கப்போகிறதே!

சுக்கிரீவ! இந்தச் சுவேலமென்றமலையிற் சேனைகளை அமர்த்துவாயாக; (இருத்தல்)

சுக்கிரீவன்:—தேவரீர் கட்டளைப்படி. (நீலனை நோக்கி) நீல! அவ்வாறு செய்வாயாக.

நீலன்:—(அரங்கிற்புகுந்து) மகாராஜரின் ஆணைப்படி. (வெளியேறி மறுபடியும் அரங்கிற்புகுந்து) தேவரீர் வெற்றிபெறவேண்டும். சேனைகளை அங்கங்கே அமர்த்தி அணிவரிசைகளை ஆராய்ந்துபார்க்கும்போது புத்தகங்களைத் தாங்கியவர்களான இனந்தெரியாத இரண்டு காட்டாள்கள் எங்கிருந்தோ பிடிபட்டார்கள். என்ன செய்வதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால் தேவரீரே உத்தரவளிக்கவேண்டும்.

இராமன்:—விரைந்து அவர்களை இங்கே அழைத்துவா. (பிறகு வானரர்களால் பிடிக்கப்பட்டவர்களும், வானர உருவங்கொண்டவர்களும், புத்தகங்களைக் கைகளில் தாங்கியவர்களுமான சுகசாரணர்கள் நீலனுடன் அரங்கிற் புகுதல்.)

வானரர்கள்:—நீங்கள் யார்? சொல்லுங்கள்.

இருவரும்:—தலைவரே! நாங்களிருவரும் ஆரியரான குமுதரின் சேவகர்கள்.

வானரர்கள்—தலைவரே! ஆரியரான குமுதரின் சேவகர்களென்று தங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

விபீஷணன்:—(சுகசாரணர்களை உற்றுநோக்கி)

ஷூஸெ்மெஸ நிகெள நவாவெ்யெதள
நவாவெ்யெதள வலெநளகவெஸள ।
வெ்ஷிெதள ராவணெநெதள
ராக்ஷவெஸள ஶுகஸாரணெள ॥

இவர்கள் நம்முடைய படையைச் சேர்ந்தவர்களுமல்லர்; காட்டில் திரிகிறவர்களுமல்லர்; இவர்கள் இராவணனால் அனுப்பப்பட்ட சுகசாரணர் என்கிற அரக்கர்களே!

இருவரும்:—(மனத்துக்குள்) ஆ! குமாரரால் அறியப்பட்டோம். (வெளிப்படையாய்) அரக்கராசன் குறைவால் அரக்கர்குலம் அழிவதைக்கண்டு இருப்பிடமில்லாமல் ஆரியரை அடைவதற்காக வானர உருவத்துடன் வந்தோம்.

இராமன்:—தோழ! விபீஷண! நீ என்ன நினைக்கிறாய்?

விபீஷணன்:—தேவ!

ஸ்ெதள ஹிராக்ஷஸெஂ்ஸ்வெ ஸஂமெதள ம்ரிணெள நுவ!
ஹாணாவிகெZவி வுஸநெ ஸெஂகெஶஂ நெவ ஜஂவதஃ ॥

அரசே! இவர்கள் அரக்கராஜனுக்கு அந்தரங்கமான அமைச்சர்கள்; உயிர்போவதான இடர்வந்தாலும் இலங்கேசுவரனை ஒருக்காலும் விட்டுப்பிரியவேமாட்டார்கள்.

ஆதலால் தகுந்தபடி அவர்களுக்குத் தேவரீர் தண்டனை விதிக்கவேண்டும்.

இராமன்:—விபீஷண! அப்படியன்று; இவர்களைத் தண்டிப்பதால் எனக்கு ஆக்கமும் வராது; அரக்கராசனுக்குக் குறைவும் வராது; ஆதலால் இவர்களை விட்டுவிடுவாயாக.

இலக்குமணன்:—இவர்களை விட்டுவிடவேண்டுமானால் படைகளின் அணிகளுள் நுழைந்து பரீக்ஷித்துப்பார்த்துப் பிறகு இவர்களை விட்டுவிடும்படி ஆரியர் உத்திரவிடவேண்டும்.

இராமன்:—இலக்குமணனால் நன்றாய் உரைக்கப்பெற்றது. நீல! இவ்வாறு செய்வாயாக.

நீலன்:—தேவரீர் கட்டளைப்படி.

இராமன்:—அல்லது; (சுகசாரணரை நோக்கி) இங்கே வருக.

இருவரும்:—நாங்கள் இதோ இருக்கிறோம்.

இராமன்:—அந்த அரக்கராசனிடம்,

தா³ராபஹாரேண ஸ்வயம் ப்ரஹிதவிக்³ரஹ: ।
யுத்³தே⁴ த்வாஹம் ந பஶ்யாமி த்³ரஷ்டுகாமோ ரணாதிதி²: ॥

“என்னுடைய தாரத்தைக் கவர்ந்ததால், தானாகவே வலிந்து போருக்கு இழுக்கப்பட்ட நான் உன்னைக் காணவிரும்பிப் போரில் விருந்தினனாக வந்திருக்கிறேன்; உன்னை (இன்னும்) நான் பார்க்கவில்லையே!” என்று, நான் கூறியதாக உரைமின்.

இருவரும்;—தேவர் உத்திரவுப்படி.

இராமன்:-விபீஷண! நாமும் நம்முடைய படையைச் சுற்றிப் பார்ப்போம்.

விபீஷணன்:—தேவரீர் ஆணைப்படி.

இராமன்:-(சுற்று நடந்துநோக்கி) பகவானான சூரியன் மறைகிறார்.

அஸ்தாத்³ரிமஸ்தகக³த: பரிஸம்ஹ்ருதாம்ஶு:
ஸந்த்⁴யாநுரஞ்ஜிதவபு: ப்ரதிபா⁴தி ஸூர்ய: ।
ரக்தோஜ்ஜ்வலாம்ஶுகவ்ருதே ஶிரஸி த்³விபஸ்ய
ஜாம்பூ³நதே³ந ரசித: படகோ யதை²வ ॥

சிவந்த பட்டாடையால் போர்த்தப்பட்ட யானைத்தலையின்மீது பொன்னாலாக்கப்பட்ட சித்திரக் கொடிப்பூப்போல, தன்னுடைய கிரணங்களைச் சுருக்கிக்கொண்டு மாலைவேளையில் சிவந்த மேனியுடன் அஸ்தமயபர்வதத்தின்மீது சூரியன் விளங்குகிறார்.

(எல்லோரும் வெளியேசெல்லல்)

நான்காவது அங்கம் முற்றிற்று.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமி சாஸ்திரி, B.A., B.L.

பழனிக்கோவை.

[௩அ௦-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

10. தோழிவந்துகூடல்.

தாதுகக் கிள்ளை யலகாற் குதர்ந்தென்னத் தாரகையைக்
கேதுதொட் டென்ன முகைபறி யேல்பழ னிக்கிரிவேண்
மாதுலன் சேதுவிற் போற்றண்ண லுன்முகை மற்றவன்றன்
தூதன்கை நாதனில் யான்கொணர்ந் தேன்மலர் சூட்டுதற்கே. (125)

கருந்தடங்கண்ணியை யிருந்துணைப்பாங்கி
நின்றிடத்தெய்தி நன்றிதென் றுரைத்தது.

11. ஆடிடம் புகுதல்.

முத்தேர் நகைநின் குழல்சூழ் சுரும்பு முரன்மலர்மேற்
றொத்தேன்வைத் தேன்செவி போழ்ந்தணி பூட்டினர் சூட்சியொத்தேன்
றைத்தேர் முருகர் பழனிநல் லாயந் தழைப்பமெல்ல
வெய்த்தே யிடையுடன் யான்வருந் தாம லெழுந்தருளே. (126)

புறமதுபோய்வரும் பூங்குழைப்பாங்கி
யறன்மலிகுழலோ டாடிடம்படர்ந்தது.

இவை இரண்டிற்கும் மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—தலைமகளை யாற்றாமைநீக்குதல்.

12. தனிகண்டுரைத்தல்.

ஏறார் பரன்செவிக் கின்னமிர் தூட்டுமெங் கோன்பழனிச்
சிறா ரிதுவெங்கட் குன்மூர லூட்டிச்செந் தேன்கந்தமோ
டூறா றன் மாந்தி யிராவிருந் தாயிருக் கும்விருந்தாய்
னூறார்மன் னுவைகி வைகறைப் போதுக நம்பதிக்கே. (127)

அணிமலர்க்கோதையை யாயத்துய்த்து
மணிமுடிமன்னனைத் தனிகண்டுரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வற்புறீஇப் பிரிவுணர்த்துதல்.

13. பருவங்கூறிவரவுவிலக்கல்.

சூர்ப்பலந் தீர்ப்பவர் வையா புரிவெற்ப சூழ்பலவின்
வேர்ப்பலம் பார்விண் டுவட்டோடுங் குன்றிள மென்கொடிச்சிக்
கார்ப்பல கொங்கை நடுநிலை சாய்த்த தரிமதர்க்கண்
போர்ப்பல செய்து செவியார் குழையப் புறங்கண்டதே. (128)

பருவங்கூறிப் பாசிழைதன்னை
வரையாதிந்நெறி வாரலென்றது.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—'இவ்வொழுக்கம் புறத்தாரறியின் இவளிறந்துபடும், இறந்துபட இவனும் இறந்துபடு'மென்னு நினைவினளாதலால் வரைவுகடாதல்.

14. மிகுத்துரைத்தல்.

உலகொரு மூன்றினு மொப்பின்மை யாலுக் கிரனெனவந்
தலர்தலை மேருவில் வையா புரிக்கந்த ரன்றுநடு
மலிபுகழ் வென்றிக் கொடியைவிண் சிந்தா மணியைமின்னார்
திலகமென் னுமற் கொடிச்சியென் றேவொன்று செப்புவதே. (129)

வரைவுகடாயவட் குரைமிகுத்துரைத்தது.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—தலைமகனது விருப்புணர்த்துதல்.

15. உண்மைகூறி வரைவுகடாதல்.

உருகுர வோரிட்ட பாமாலை மாலை யுவந்துவரந்
தருகுர வோர்கந்தர் வையா புரிவெற்ப தாய்தந்தையா
மிருகுர வோரு மிருன்மொய்க்கு மீயொக்கு மெந்தமரும்
வருகுற வோர்தினை காப்பேங் கரப்பில்லை மால்வரைக்கே. (130)

இல்லதெடுத்துச் சொல்லியுடம்படா
வண்ணவொடிகுலை யுண்மையுரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

16. வருத்தங்கூறிவரைவுகடாதல்.

விரையாருஞ் செச்சைப் புயத்தார் பழனியின் மெல்லியற்கோ
வரையாமை வாட்ட மூமக்கோ வரைவென்னில் வாட்டமுங்கள்

உரையா லுமைக்கண்ட யானே விருதலை யுற்கைப்பட்டுத்
தரையா மிடந்தனைக் காணு வெறும்பிற் றயங்குவனே. (131)

வரிவளைக்கையினன் மனக்கவல்வுணர்த்தித்
தெரியிழைப்பாங்கி வரைவுகடாயது.

மெய்ப்பாடு—அச்சம் பயன்—வரைவுகடாதல்.

17. தாயச்சங்கூறிவரைவுகடாதல்.

பச்சென்ற மஞ்ஞைகொண் டேந்துவ போலுமை பால்புகட்டி
வைச்சன்று போற்றிய சேயோர் பழனிமன் னுவயனுந்
தச்சன்செய் பாவைக் கணுமேரு வேந்தத் தலைப்படல்கண்
டச்சங்கொண் டாளன்னை தாங்காத் தலைச்சுமை யாளரொத்தே. ()

கனிமொழிக்கடுப்ப தினியறியேனெனக்
கோற்றொடிப்பாங்கி யேற்புறவுரைத்தது.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—செறிப்பறிவுறுத்து வரைவுகடாதல்.

18. இற்செறிவறிவித்துவரைவுகடாதல்.

கருமாவரனுட னூற்றத்திற் காண்பவர் காக்கும்வெற்பா
வருமா மகளை யெதிர்நோக்கி யன்னைவை யாபுரிவேள்
தருமாடற் சூரன் கடம்போக லென்றிந்திர சாலத்திண்டேர்ப்
பொருமாற்ற லென்னத் தடுத்தாள் வரைப்புறம் போகலென்றே. ()

இற்செறித்தமை யேந்திழைப்பாங்கி
மற்சிலைத்தோண் மன்னற்கிசைத்தது.

19. தமர்நினைவுரைத்துவரைவுகடாதல்.

துங்கங்கொ டெங்கம் பழுக்குலை மந்திதொள் ளாதுமுள்ளா
லங்கங்கு வேய்ந்தென்ன வெற்பாவிப் பாலெம ராயிழையை
நங்கங்கை மைந்தர் பழனியிற் சிற்சிலர் நாவசைப்பச்
சிங்கஞ் சுமந்த பொருப்பாற்கண் டில்லஞ் செறிப்பர்களே. (134)

அளிப்புரைகுழலியை யொளிப்பரிற்செறித்தென
வெளிப்படையாக வேந்தற்குரைத்தது.

இவற்றிற்கு மெய்ப்பாடும் பயனும் அது. இவற்றுண் மேலிற்பாட்டுக் குறிப்பினுனே செறிப்பறிவுறுத்தாள்.

20. எதிர்கோள்கூறிவரைவுகடாதல்.

கடற்கரைச் சங்கங்கள் வாய்திறந் தேமழைக் காற்றுளிக்குக்
கிடக்குமன் றேவெம்மைப் போலன்னை யென்னையர் கேளிரெல்லா
மடற்கதிர் வேலர் பழனிவெற் பாநின்னை யங்குக்கண்டா
லுடற்குயிர் போலுவப் பார்மணம் வேட்ப வுனையெதிர்ந்தே. (135)

வென்றிவேலனை யின்றுணைப்பாங்கி
மணமுரையாடெனத் துணிவுகூறியது.

மெய்ப்பாடும் பயனும் அது. வரைவின்கட் டலைமகனை யொற்றுமைக் கொளுவுதலுமாம்.

'ஏறூர்பரன்' என்னும் பாட்டுத்தொட்டிதன்காறிவ்வொன்பதுஞ் செறிப்பறிவுறுத்துவரைவுகடாயின வென்பது. இவையெல்லாந் தோழிக் கூட்டமும் தோழிற்கூட்டத்தின் விகற்பமுமெனவுரைக்க.

21. ஏறுகோள்கூறிவரைவுகடாதல்.

காரேறு கூந்தற் சவரியஞ் சல்லியுங் காமர்முலைப்
போரேறு கொம்பு மிடையர் கண்டாடலும் பொன்னிற்கண்டு
கூரேறு வேலர் பழனிநம் முல்லையங் கோவலர்கள்
ஓரேறு தன்னைவிட் டாரும்ப ரான்கண் டுருகுதற்கே. (136)

ஏறுவிடுப்பர் தேறினியென்றது.

இது முல்லைத்திணை. மெய்ப்பாடு—அது. பயன்—ஏறுகோளுணர்த்தி வரைவுகடாதல்.

22. அயலுரையுரைத்து வரைவுகடாதல்.

வண்ணப் பவளத் திருவாய் மலர்ந்து மலரவற்கு
மண்ணற்கும் போதித்த செவ்வேள் பழனியி லாண்டகைமுன்
நண்ணிக் கதிரைக் குடநீருட் காட்டலி னாளைமணம்
பண்ணத் தகும்பொன்னைப் பாவியென் னோசொல்வன் பற்பலவே.()

வம்பலர்கொங்கையை வம்பலர்பேசி
வம்பலர்புனைவரென வள்ளற்கிசைத்தது.

மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்தபெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

23. தினைமுதிர்வுரைத்து வரைவுகடாதல்.

கோட்டுத் தலையசைத் தேமுகைக் கைகுவித் தேட்டின்விர
னீட்டித் தினமெண்ணிச் சோதிடங் கூறி நெடுங்கணியார்
சேட்டுக் குமரர் பழனிநல் லாய்தினைக் கேவினையாய்க்
காட்டுக் கெறித்த நிலவாகச் செய்வர்நங் காதலையே. (138)

தினைவளங்காப்ப தினிநமக்கிலையெனக்
கடனறிபாங்கி மடவரற்குரைத்தது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—செறிப்பறிவுறுத்தல்.

24. பகல்வரல்விலக்கி வரைவுகடாதல்.

வேயுற்ற விந்திரன் சுந்தரி தோள்புல்க வேல்பணித்த
சேயிற் பொலியும் பழனிவெற் பீர்பைந் தினையையெமர்
காயப்புகுவர் கணிப்பகை யாற்புனங் காவல்விட்டேம்
ஞாயிற்றின் முன்வருந் திங்களொப் பீர்வரி னன்பகற்கே. (139)

இகல்வேலண்ணலைப் பகல்வரலென்றது.

மெய்ப்பாடு—அது. பயன்—பகற்குறிவிலக்குதல்.

25. தினையோடுவெறுத்து வரைவுகடாதல்.

திவலைக் குறுந்துளித் தேனுண்டு வண்டு திரண்டுகிண்டுங்
குவளைப் புயம்பன் னிரண்டோர் பழனிக் குளிர்புனத்தே
யுவலைப் பொருப்ப னலம்பயி ராக்கி யுவகைதுய்க்குங்
கவலைக்குக் காப்பிருந் தோர்க்கே கவலையுங் காய்த்ததுவே. (140)

கனக்குழற்பாங்கி தினைப்புனத்தோடு
பிறைப்புறமாக வெறுத்துரைத்தது.

26. வேங்கையோடுவெறுத்து வரைவுகடாதல்.

மும்மைக்கண் ணன்பெற்ற சேயோர் பழனி முகிணகையாய்
வெம்மைக் கணைக்கு மதவேளுந் தீண்டிலன் வேங்கையென்றே
கொம்மைக் களிவண்டும் வீழா தரும்பறக் கொய்தல்செய்யா
வெம்மைப் புனத்தொ டொறுப்பதொன் றேதகு மிக்கணிக்கே. ()

கணிமேல்வைத்துத் துணிவுகூறியது.

27. இரக்கமுற்று வரைவுகடாதல்.

வித்தினர் கொய்வர் வளர்த்திர்நில் லீரென் றெமைவெறுக்கும்
இத்தினை நாளைப் படும்பாடு பார்ப்பவ ரியாரயனார்
மைத்துன ரென்னும் பழனிப் பிரான்றந்தை வாய்சுவைப்பப்
புத்திர னைக்கறி யாக்கிய தாய்தந்தை போற்றுணிந்தே. (142)

மன்னர்க்கிரங்கி யின்னலுற்றது.

28. கோய்தமைகூறி வரைவுகடாதல்.

சொல்வதென் சூர்கிளை வேர றப் போர்க்களந் தூட்படுத்தி
வெல்வலிவீரர் பழனிதொ ழாரில்வெங் கூனிரும்பாற்
கல்வரை நாட தினைத்துணை நன்றியைக் காய்ந்தெமருங்
கொல்வர் பனைத்துணை யாப்பயன் றேடிக் குவிப்பதற்கே. (143)

சேண்புனத்தாடல் செய்யேமினியென
மாண்புடைத்தோழி வரைவுகடாயது.

29. பிரிவருமைகூறி வரைவுகடாதல்.

கிரிதா ருகனெடுங் காய்ந்தோர் பழனியிற் கிள்ளைப்பிள்ளை
யரிதா ளடைந்தரன் றாள்கண்டசுந்தர னம்புவிமேற்
பெரிதார்ந் தெனவைகு மாலெம்மைக் கிரன் பிரித்துவிட்ட
திரிதா ளரசிலை போல்விதி நீக்குந் தினைப்புனத்தே. (144)

பிரிவரும்பெற்றியால் வரைவுதோன்றச்
சிறைப்புறக்கிளவியின் மறைப்புறக்கிளந்தது.

30. மயிலோடுகூறி வரைவுகடாதல்.

வேங்கைகள் வாய்திறந் தான்மான்க ளென்செயு மென்புனங்கா
ணீங்களும் போகந் துறந்தீரெம் பாலிந்த நேயமுண்டோ
காங்கய வேள்பழ னித்தோகை காளெங் கருத்தர்வந்தான்
மூங்கை களைக்கண்ட வாறென தென்று மொழிந்திடுமே. (145)

தாங்கருந்துயரொடு நீங்கரும்புனம்விட்
டாங்ககனெறியிற் பாங்கிபகர்ந்தது.

இவையாறிற்கும் மெய்ப்பாடும் பயனும் அது.

31. வறம்புனங்கண்டு வருந்தல்.

குன்றே யருவித் துறையே யிதென்னே குவலயமா
னின்றே தனத்தில் வடித்தகண் ணீரென்ன நீரிருந்தீர்
வென்றே விறல்கொண்ட வேலோர் பழனிநம் மெல்லிநல்லார்
சென்றே வருந்துறைக் கானலைப் போன்றதித் தீம்புனமே. (146)

நறும்புனநீத்துக் குறுந்தொடியகலத்
தெறுங்கதிர்வேலோன் வறுங்களங்கண்டது.

32. பதிநோக்கி வருந்தல்.

பொன்மகள் சேர்கின்ற சீறா ரிதென்றென்று போய்த்திரும்பும்
என்மன மேகின் செயல்பார்க்குங் காலுல கேழ்பரவு
மன்முரு கேசர் பழனி தொழாரென்ன வான்கணத்தை
மின்மினி யென்று குரீஇப்பறந் தோடி விரும்புவதே. (147)

கேழ்பொலிமடந்தை வாழ்பதிநோக்கி
யெய்துதற்கரிதென வெய்துயிர்த்துரைத்தது.

இவையிரண்டிற்கும் மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றுமை நீக்குதல். இவற்றுள், இது தலைமகளிற்செறிவிக்கின்றகாலத்துத் தலைமகன் தோழிகேட்பத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

பகற்குறி முற்றும்.

கங. இரவுக்குறி.

14 இரவுக்குறி வேண்ட லாற்றருமை கூற
னின்றநெஞ் சுடைத னிலைகண்டு நேர்த
லுட்கொள வினத லுட்கொண்டு வினுதல்
குறியிடங் கூறல் குறியேற் பித்த
லிரவர வுரைத்த லேதங் கூறல்
குறைநேர்த லோடு குறைநயப் புரைத்தன்
மயின்மே லிசைத்த வரவுணர்ந் துரைத்த
ருய்துயி லறித றலைவிதுயி லெடுப்ப
விடத்துய்த்து நீங்க றளர்வகன் றுரைத்தன்

மருங்கணைத லோடு முகங்கண்டு மகிழ்தல்
பள்ளியிடத் துய்த்தல் பள்ளியிடத் துய்த்து
வரைவு கடாவி வரவு விலக்கல்
வரைவுடம் படா தாற்று துரைத்த
லதரிடைச் செலவிற் கிரக்கங் கூற
விருளற நிலவு வெளிப்பட வருந்தல்
வேற்றுக்குறி கூறல் கடலிடை வைத்துத்
துயரறி வித்த றோழியு மின்றித்
தானே கிடந்து தனிமையுற் றுற்றுங்
காம மிக்க கழிபடர் கிளவியுங்
காப்புச்சிறை மிக்க கையறு கிளவியு
மாறுபார்த் துற்ற வச்சக் கிளவியுந்
தன்னுட் கையா றெய்திடு கிளவியு
நிலைகண் டுரைத்த னெடுங்கடற் சேர்த்த
லலரறி வித்தலோ டாறைம் மூன்று
மிரவிற் குறியென் றியம்பிசி னோரே.

1. இரவுக்குறிவேண்டல்.

செந்தேன் பிலிற்றக் கருந்தேன் விருந்துண் ணுஞ் செச்சையந்தார்க்
கொந்தேறு மார்பர் பழனிநல் லாய்நுங் குழலளிபோல்
வந்தேன் விருந்தென்று நுங்கூந்தற் கானின் மழையிருள்வாய்
நொந்தேனுங் கொங்கைப் படாம்போ லருவி நுடங்குதற்கே. (148)

இரவின்குறியைப் புரவலனெண்ணிப்
பாங்கியைத்தனிகண் டாங்கனமுரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—இரவுக்குறிநேர்வித்தல்.

2. வழியருமைகூறிமறுத்தல்.

படர்காற்றி னூபுரங் கார்ப்போர்வை திங்கட்பைம் பொன்மகுடஞ்
சுடர்காற்ற வோங்கி வழுக்க லொழுக்கிய சோணை முட்கான்
றிடர்காட்டி மெல்லநெஞ் சானுடும் பாய்ப்பற்றிச் சென்னெறித்து
மடல்காட்டு நீபர் பழனிவெற் பாநம் மலைநகரே. (149)

இராவரவுரைத்த தராபதிதனக்குப்
பராநெறியரிதெனப் பாங்கிபகர்ந்தது.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—இரவிற்குறிமறுத்தது.

3. நின்றுநெஞ்சுடைதல்.

விலையார் பெருவிலைச் சூடா மணியொன்றை வெவ்வரவின்
றலையாரக் கண்ட வறிஞனைப் போலத் தளருநெஞ்சே
யிலையார் குராநிழற் செவ்வேள் பழனிநின் றெய்தவொண்ணுச்
சிலையார் நுதலிக்கு நீவைத்த காதற்கென் செப்புவனே (150)

தோழிசொல்ல வாழ்தயருற்றது.

4. இரவுக்குறிநேர்தல்.

வயங்கெழு வேலர் பழனி தொழும்வள்ள லேமடங்க
லியங்கருங் கங்குல்வந் தின்மீட்சி வாய்சொல்ல வெண்ணமொன்றுய்
முயங்கல்குறித் தங்கர்கோன்பா லுருமத்தின்மொய்பொருட்காய்த்
தியங்கினன் போனிற்பை பொல்லேலனென் சொல்வன் றிருமகட்கே.

சிலம்பன்றளர்வு தீரும்வண்ண
நலம்புரிபாங்கி நயந்துரைத்தது.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—இரவுக்குறிநேர்தல்.

5. உட்கோளவினுதல்.

வேதோப தேசக் குகவேள் பழனிவெற் பாமறுகி
லாதோ ரணர்கற் பகப்பூக்கொய் தியானைக் கணியுமுன்னுர்
பீதோர் பயினிழ லேதோ கலவை மிலையுமலர்
யாதோசொல் லிவ்விருட் கெல்விளக் காகு மியல்புகொண்டே. ()

சென்னெறிவிலகிய மன்னிலைநோக்கிச்
சொன்னலப்பாங்கி சூழலொன்றிசைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—தலைமகட்குக் குறியிடமுணர்த்துந் தோழி அவனுற் றன்னை வினவுவித்தல்.

6. உட்கோண்டுவினுதல்.

திருமுக மூவிரண் டுள்ளார் பழனிச்சில் லோதிநல்லாய்
குருமுகந் தேர்ந்தென யான்றேறக் கூறு நங் குன்றமின்னு
ரொருமுக மாய்த்திரண் டெப்போது சூட்டியெச் சாந்துலர்த்தி
யிருண்முகத் தெல்லிக் கணம்போனின் றுடுவ தெந்நிழலே. (153)

அவள்வினவியகுறிப் பிவனறிந்துரைத்தது.

மெய்ப்பாடு—அது. பயன்—குறியிடமுணர்த்துவித்தல்.

7. குறியிடங்கூறல்.

சேந்தன்வை யாபுரிச் செவ்வேள் புனைந்த செழுங்கழுநீர்
சாந்த மணிக்துமற் றெங்கோன் மயில்பயி றண்பொழில்வாய்
ஏந்திழை வள்ளிக் கொடிவா டிடாதுபண் டிட்டநிழற்
பூந்துணர் வேங்கையின் பாங்கரில் யாங்கள்புக் காடுவதே. (154)

ஏடவிழ்தார்ப்புயத் தேந்தற்கிளை
கூடுமிரவுக் குறியிவணென்றது.

மெய்ப்பாடு—அது. பயன்—இரவுக்குறியிடமுணர்த்துதல்.

8. இரவுக்குறியேற்பித்தல்.

வேடிச்சி சாயல் புயலென்ன வேலொளி மின்னெனக்கண்
டாடிச் சிகிதுள்ள வூர்க்கோர் பழனியி லன்றில்பெடை
கூடிச்சை சௌபரி மாமுனி போற்கண்ட கோனங்கிவாய்
வாடிச்செல் பாவங்கண் டேன்கண்டி லேனவன் வாழ்துயிலே. ()

பரிவுற்றுனிலை பார்ப்பரிதென்ன
விரவுக்குறியவட் கேற்பித்தது.

9. இரவரவுரைத்தல்.

பார்த்தந்த மாலைப் பசுந்தோ லுரித்துப் பழனிச்செவ்வேள்
சீர்த்தந்தை போர்த்திய போர்வையைப் போல்வரை செம்முகொண்மூச்
சூர்த்தந்த கங்குற் களிற்றீட்டத் தியாருந் தொழத்தகையோன்
கார்த்தந்திப் போர்ச்சிங்கம் போல்வர வேண்டினன் காரிகையே. ()

புரவலனிரவர லரிவைக்குரைத்தது.

இவையிரண்டற்கும் மெய்ப்பாடு—அச்சத்தைச்சார்ந்த விளிவரல். பயன்—தலைமகளை இரவுக்குறிநேர்வித்தல்.

10. ஏதங்கூறிமறுத்தல்.

மூரன் மறுசிகை நீக்கியுண் பாரென்ன மூளைகவர்ந்
தோரல்விற் பல்கரி கொல்சியம் யாளி யுலாமிருள்வாய்ச்
சாரென்ப தோகங்கை சென்றுடி டாது கரக்கொள்வபோற்
சூரஞ்சும் வேலர் பழனிநம் மாவித் துணைவனையே. (157)

இரவரினிழுக்கம் பெரிதென்றழுங்கி
மருமலர்க்குழலி மறுத்துரைத்தது.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—இரவுக்குறிமறுத்தல்.

11. குறைநேர்தல்.

நீலக் கிரீவப் பரியார் பழனியி னென்னலென்னைக்
கோலக்கல் லாரச்சுனைவீழ்ந் தெடுத்துக் குடிநிறுத்தார்க்
கேலக் கழறுதல் யானே கயத்திழிந் தேறியபின்
காலற்கொன் றானை மறுப்பான்கொல் கீரன் கவித்திறதே. (158)

மின்னிலைவேலோன் றன்னிலைகேட்டுப்
பிறைநுதற்பேதை குறைநயந்தது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—இரவுக்குறிநேர்தல்.

12. குறைநேர்ந்தமைகூறல்.

தேக்கம் பனைகொண் டிடத்துமுன் சோதித்துச் செல்லுமும்பல்
காக்கும் கரிதிர வெற்பாவுன் னேவல் கடைப்பிடித்திப்
பேய்க்கங்குற் கியான்செய்த தெல்லாம் பழனிப் பிரானைப்பெற்ற
வாக்கந் தருந்திரு வாரூரர் தாமிங் கறிகுவரே. (159)

குறைநயந்தனள் கோதைமாதென
விறைவளைப்பாங்கி யேந்தற்கிசைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—தலைமகற்குக் குறைநயந்தமை யுணர்த்துதல்.

13. மயின்மேலிசைத்துவரவுணர்ந்துரைத்தல்.

செந்தமிழ் கும்பற்குணர்த்திய தேசிகர் தென்பழனிக்
கந்தர்தம் மூர்த்தியைம் புள்ளிலொன் றாயின காட்சியினால்
வந்த......... மிங் கோரின்ப மென்று வழங்குதல்போற்
றந்துயி னீங்கிப் பெடைபோ டொலிப்பன தாழ்குழலே. (160)

மயிலொலியெடுப்பத் துயிலுணர்ந்தது.

மெய்ப்பாடு—அது. பயன்—தலைமகன் வரவுணர்த்துதல்.

14. தாய்துயிலறிதல்.

மேகத்தி லூர்ந்தவன் றன்குறை தீர்த்தசெவ் வேள்பழனிப்
பாகொத்த சொல்லி யதோவொலி கேட்பன பாய்பொழில்வாய்

நாகத்தைப் பேர்ப்பகை யாற்கோ டொடித்நம் மூசலையும்
வாகைத் துதிக்கையொப் பென்றது கைக்குமோர் வாரணமே. ()

தாய்துயிலறிவா னூசன்மிசைவைத்
தாயிழைப்பாங்கி யரிவைக்கிசைத்தது.

இவ்வாறு கூறவும் வாளாதுகிடப்பிற் றுய்துயின்றுளென்றறிதல் பயன். மெய்ப்பாடு—அது.

15. துயிலெடுத்துச்சேறல்.

பேதாய் பழனிப் பெருமான் மயில்வரிப் பிஞ்சமென்னப்
போதாய்குவளை மலர்வநின் கண்ணுக்குப் போகிவைக
மீதாய் நகுட னுபேந்திரன் வான்பத மேவியபோல்
வாதா யினுமிலை யாயினு நீகண்டு வந்தருளே. (162)

அன்னை துயிலறிந் தாய்தருபாங்கி
மின்னிடைதன்னொடும் விளம்புகின்றது.

மெய்ப்பாடு—அது. பயன்—தலைமகளைக் குறியிடத்துய்த்தல்.

16. இடத்துய்த்துநீங்கல்.

மாதவர் சூட்டக் திருத்தணி மேவும்வை யாபுரிவேள்
பாதமதேறுநின் கண்ணிணை யாமிவை பானல்கண்டா
யீதறு காற்குப் பயப்பட் டொளித்ததென் றெள்ளிச்சிறு
காதிகள் பூதத் ததைநீ முடிக்கத் தருவன்மின்னே. (163)

அணிவளர்கொங்கையை யாங்கனநிறீஇப்
பணிவளரல்குற் பாங்கிநீங்கியது.

மெய்ப்பாடு—அது. பயன்—தலைமகளைக் குறியிடத்துநிறீஇ நீங்குதல்.

[தொடரும்.]

T. K. இராமாநுஜையங்கார்,

உதவிப்பத்திராசிரியர்.

இரசை வடமலையப்பபிள்ளையன்.

[இலக்கணவிளக்க ஆசிரியர்பரம்பரை திரு. சோமசுந்தர தேசிகர்.]

ஏர்விற்றுப் பள்விற் றுடைமையெல் லாம்விற் றிருந்தமனைச்
சீர்விற் றனமுனைக் காணுத முன்றெரி சித்தபின்பு
போர்விற் றடக்கை யிரையூர் வடமலை பூபதிநின்
பேர்விற்று முன்விற்ற தெல்லா மறுபடி பெற்றனமே.[1]

என்று பாடப்பெற்ற பெருமைவாய்ந்த வடமலையப்பபிள்ளையன் என்பார் பெரிய சீமானுகவும் கல்விமானுகவும் பெருங்கொடையாளியாகவு மிருந்தவர். இவரைக்குறித்துத் தமிழிலக்கியவரலாறு யாதொன்றும் கூறுது, 'திருநெல்வேலி வடமலையப்பபிள்ளை யென்பவர் மச்சபுராண மியற்றியவர்; வடமலைவெண்பாவென் றொரு நூலும் இயற்றியுள்ளார்' என்றுமட்டும் கூறும். ஆயினும், தமிழ்ப் புலவர்சரித்திரம் சற்றுவிரிவாகக் கூறுவதோடு இவர்மேற் பாடிய புலவராற்றுப்படையிலிருந்து மேற்கோளும் காட்டுகிறது. பிள்ளையன் இயற்றிய மச்சபுராண அச்சுப்பதிப்பின் முகவுரையிலே திரு. அநவரதவிநாயகம்பிள்ளையவர்கள் இவரைக்குறித்த செய்திகளைத் தாங் கேட்டறிந்தவாறு எழுதியிருக்கின்றார்கள். அவர்கள் முகவுரையெழுதிய காலத்திலே வடமலைப்பிள்ளை என்னும் பெயரைத் தாங்கியவர்கள் இருவரேனும் உண்டென்ற செய்தி வெளிப்பட்டில தென்று தெரிகிறது. ஒருவர் காவை வடமலையப்பபிள்ளையன்[2] மற்றவர் இரசை வடமலையப்பபிள்ளையன். இருவரும் பாட்டனும் பேரனுமாவர்; இருவேறுகாலத்தினர்; காவையென்பது திருப்பரங் குன்றையடுத்துள்ள காவனூர் ஆகும். இரசை இரையூர் என்று

---

[1] புலவராற்றுப்படை, விடுபாட்டுக்கள்.

[2] காவை வடமலையப்பபிள்ளையன்சரிதக்குறிப்புக்களைச் செந்தமிழ் 35-ஆம் தொகுதியில், 225–234 பக்கங்களில் காண்க.

சொல்லப்படுகிறது. இவ்வூர் காவேரிக்கரையிலுள்ள திருவரங்கத்தை யடுத்துள்ளதெனக் கூறுவர். அதற்கேற்ற ஆதாரம் ஒன்றும் கிடைத்திலது. இவ்வூர் திருநெல்வேலிச் சீமையிலேயே யிருந்திருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. அதற்கேற்பப் புலவ ராற்றுப்படை,

'கரைபொரு தரங்கத் தாளமா நதியான்
இயலிசை முத்தமிழ் யாவரு முணர்ந்து
பயிலிருங் கோளப் பாண்டிநன் னாடன்
இரையூர் வளேதவ ழிரையூர்க் கதிபன்'

என்று கூறும். ஒருக்கால் இராசவல்லிபுரம் என இக்காலத்து வழங்கும் ஊர் இரையூராகவிருந்தாலும் இருக்கலாம். அன்றி வராசை யென்ற சங்கரன்கோயில் குறுகி இரசையாயினுமாயிருத்தல்கூடும். இதனுண்மை இதுபொழுது அறிதற்கில்லை. பிள்ளையன் கார்காத்தவேளாண் வகுப்பினர். நாரணக்குடையான் குடியினர்[1], சைவசமயத்தவர். செந்திலாண்டவனிடத்து மாறா அன்பு பூண்டவர். இவர் கால்வழியினரும் அவ்வாறே குகனடிமைத்திறம் பூண்டவர்கள்.

முன்னோர்கள்.

பிள்ளையன் தாய்வழியினரும் தந்தைவழியினரும் பாரம்பரியமாக உயர்குடியைச் சார்ந்தவராவர். இவருடைய தந்தையார் இருவப்பபிள்ளையாவர். இவருக்கு இரு சகோதரர் உண்டு. ஒருவர் பெயர் வைத்தியநாதபிள்ளை. இவர் பிற்காலத்தில் வடகரைத் தானபதியாகவிருந்தவர். இம்மூவரும் தாய்வழியில் ஒரு பெரிய வமிசத்தைச் சார்ந்தவர். அவ்வமிசம் 1391 முதல் காணப்படுகிறது.

கொடிவழி வருமாறு:—

---

[1] இவர் பாடிய நூல்களில் நாரணக்குடையான்கோத்திரத்தினர் வடமலையப்பபிள்ளையன் என்று காணப்பட, அவருடைய கால்வழியினர் இரைக்குடைகோத்திரத்தினர் என்று கூறுவர். இந்த வேறுபாட்டின் உண்மை காணுதற் கேதுவில்லை.

இராசை வடமலையப்பபிள்ளையன் கொடிவழி.



கி. பி. 1391 முதல் 1461 வரையில் இப்பொழுது சொக்கம் பட்டி என்று சொல்லப்படும் வடகரை முதலாய ஊர்களின் ஜமீன் தாராகவிருந்த செம்புலி சின்னணைஞ்சாத்தேவர் முத்தணைஞ்சாத் தேவர் இவர்களுடைய தானுபதியாக வைத்தியப்பபிள்ளையும் அவ ருடைய சகோதரர் சவரிப்பெருமாள்பிள்ளையு மிருந்தனர். 1462 முதல் 1516 வரை முற்கூறிய ஜமீனில் வைத்தியப்பபிள்ளைமகன் குற்றாலநாதபிள்ளை தானுபதியாகவிருந்தார். 1536 முதல் 1604 வரை குற்றாலநாதபிள்ளைமகன் திரிகூடநாதபிள்ளை தானுபதியாக விருந்தார். அவர் இறந்துபோகவே அவருடைய குமாரன் சிறுவனாக இருந்தமையால் திரிகூடநாதபிள்ளையின் சிறிய தந்தையும் குற்றால நாதபிள்ளையின் சகோதரருமான வைத்தியப்பபிள்ளை தானுபதியாக ஆனார். இவருடைய புத்திரர்கள் பிச்சைப் பிள்ளையும் சவரிப்பெரு மாள்பிள்ளையுமாவர். இவர்களையன்றி ஒரு பெண்ணுமுண்டு. பிச்சைப்பிள்ளை கி. பி. 1662 முதல் தானுபதியாகவிருந்து பாளையத் தின் காரியங்களை நிர்வகித்துவந்தார். இவருடைய தங்கை இப் பொழுது குடியிருப்பு என வழங்கும் தென்குடிகையூரிலுள்ள அனந்தபத்மநாபபிள்ளையை மணந்தாள். இவர்கட்குக் குற்றாலநாத பிள்ளையென்றும் வைத்தியப்பபிள்ளையென்றும் இருவப்பபிள்ளை யென்றும் மூன்று பிள்ளைகள் பிறந்தனர். இவருள் வைத்தியப்ப பிள்ளையே நெல்விடுதூது பெற்றவர். இருவப்பபிள்ளையை 'பொற்றாரு வென்னுங் கொடையான் இருவப்பபூபதி'[1] என்று நெல்விடுதூது கூறும். இருவப்பபூபதி காவை வடமலையப்பபிள்ளையின் குமாரத்தி யை மணந்து வடமலையப்பனைப் பயந்தார். காவை வடமலையப்ப பிள்ளை மதுரை நாயக்கர்களுடைய காரியகர்த்தராகவிருந்தவர். இவர் கி. பி. 1623 முதல் 1664 வரை அவ்வுத்தியோகத்திலிருந் தார்; கடலிலிருந்து செந்தில்நாயகரைக் கொண்டுவந்து பிரதிட்டித் தவர். அவர் சேவைகாணுதற்பொருட்டுத் திருச்செந்திலில் மண்டபமொன்று கட்டிய செய்தியையும் எம்பெருமான் சேவை சாதித்த செய்தியையும் 'சகாப்தம் 1595-ன் மேல் செல்லாநின்ற

[1] நெல்விடுதூது. 91

கொல்லம் 829 விஜய வருஷம் தைமீ 23உ வெள்ளிக்கிழமையும் திரயோதசியும் சிவயோகமும் சிவகரணமும்பெற்ற புனர்பூசத்தில் மிதுனலக்கினத்தில் விசுவநாதநாயக்கர் அய்யன் திருமலைநாயக்கர் அய்யன் வடமலையப்பபிள்ளை அய்யன் இவர்களை ரக்ஷிக்கும் பொருட்டாக சுவாமி எழுந்தருளினார்"[1] என்று அந்த மண்டபத்தி லுள்ள கல்வெட்டுக் கூறுகிறது. இவருடைய குமாரர் திருமலைக் கொழுந்துபிள்ளை. இவர் சொக்கநாதநாயகருடைய நாளில் திருநெல் வேலிச் சீமையில் காரியகர்த்தராகவிருந்தார். இவருடைய தங்கை யே இரசை வடமலையப்பபிள்ளையனின் அன்னையாராவர். இச் செய்திகளெல்லாம் வடகரை சமஸ்தான வரலாறு, நெல்விடுதூது புலவராற்றுப்படை இவைகளினின்று தொகுத்தெழுதப்பட்டன வாகும்.

இவ்வாறு தாய்மரபு தந்தைமரபு இருவழியிலும் பெருமை பெற்ற வழியில்வந்த வடமலையப்பர் இளமையில் தக்க புலவர்க ளிடம் கல்விபயின்றார். இவருடைய ஞானகுரு சுவாமிநாதசிவாசாரி யர் என்று நீடூர்த்தலபுராணம் கூறும்.

மாமேவு சோணாட்டிற் சிறப்பா யோங்கி
வளர்துகிலி கஞ்சனூர் மருவிவாழும்
பாமேவு திருமறையோர் குலத்துட் டோன்றிப்
பாசவினை யகலவருட் பார்வை பார்த்து
நாமேவு மந்திரத்தை யுபதேசித்து
ஞானபோ தனைபுரிந்தெந் நாளுங் கஞ்சத்
தேமேவு பெரும்புகழ்ச் சுவாமிநாத
தேசிகன்பங் கேருகத்தாள் சிந்தைசெய்வாம்.

மச்சபுராணமோ சுப்பிரமணியசிவாசாரியரை ஞானகுருவாகக் கூறும்.

---

[1] செந்தமிழ்த்தொகுதி. Ix, பக்கம். 527.

இருவினையும் மலம்போர்த்த வந்தகா ரப்படல
விருணீத் துண்மை
யுருவினைமுற் றினுமுணர்த்த வுதித்தகதிர்ப் பரிதியென
வுபதே சித்த
குருவினைநற் றுகிற்கஞ்ச னூர்வாழும் கோதின்மறைக்
கொழுந்தின் செய்ய
மருவினைச்சுப் பிரமணிய தேசிகனை யனுதினமு
மனத்துள் வைப்பாம்.

இவர் தம் உறவின்முறை தந்தை தனயன்முறையாதல் வேண்டுமெனத் தோற்றுகிறது. மேற்காட்டிய செய்யுட்களில் தேசிகன் எனக் கூறியதும் ஆசாரியனென்னுமுறைமைபற்றியாகும். கார்காத்த வேளாண்வகுப்பினரது ஞானசிரியன்மார் காவிரிக்கரையிலுள்ள கஞ்சனூரின்கண்ணேவாழும் சிவப்பிராமணர்கள் ஆவர். இச்செய்தி அவ்வகுப்பினர் யாவரும் அறிந்ததொன்றும். இச்செய்திகளையன்றி இவரது இளமையைக் குறித்து வேறொன்றும் அறிவதற்கில்லை.

இவர் மதுரை நாயக்கவரசர்களிடம் காரியகர்த்தாவாக விருந்ததாகக் கல்வெட்டுக்களேனும் நூல்களேனும் கூறவில்லை.

'வாரணக் கொடைபயில் காரணக் கொடையான்
தருவொப் பெனவெழு தாரணி புரக்கும்
இருவப் பன்பெறு மிராச குமாரன்
தெரிதமிழ்க் கூடற் பெரியகர்த் தாக்கள்
வரிசைப் பெயர்பெறும் வரிசைத் துரைமகன்
சிங்கா சனத்துரை மங்கா மைக்குமுன்
சூரிய மூர்த்திதன் காரண வரத்தாற்
பேர்பெற வுதித்த சூரிய மூர்த்தியோ
டரசர்க் கரசென வவனியேழ் புரக்கும்
இருவப் பனுக்கு மின்னுயிர்த் தாதை
* * * * * * * *

இரசைப் பதிவள ரிருவப் பணியருள்
வரிசைப் பெரியவன் வடமலை யப்பன்'

என்று காணப்படுகிறதேயன்றி இவர் அரசுசெலுத்தியதாகக் காணப்படவில்லை. இவர் தாமே கல்விமானாக விருந்ததன்றிப் பலபுலவர்களை யாதரித்துவந்தவராவர்.

புலவராற்றுப்படை இவர்மேல் பாடப்பட்டது. இதனைப் பாடியவர் திருக்குருகூர்ச் சிறிய இரத்தினக் கவிராயர். இந்நூல் அகவற் பாவாலியன்ற ஐந்நூற்றுநாற்பத்திரண்டு அடிகளையுடையது. இந்நூல் கொல்லமாண்டு அ௬அ(கி. பி. 1693)ல் அரங்கேற்றப் பட்டது. இந்நூலைத்தவிரப் பல தனிப்பாக்களும் இவர்மேல் பாடப் பட்டுள்ளன. இவ்வடமலையப்பரால் ஆதரிக்கப்பட்ட மற்றைப் புலவர்களுடைய பெயர் இப்பொழுது அறிவதற்கில்லை.

வடமலையப்பபிள்ளையன் பாடியனவாக இரண்டு நூல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள் நீடூர்த்தலபுராணம் ஒன்று. இது மாயூரத்திற்கு வடக்கு மூன்றுகட்டையளவிலுள்ள திருநீடூர் என்ற திருப்பதியிற் கோயில்கொண்டுள்ள சிவபெருமான்மீது பாடப்பட்டதாகும். இது பாயிரத்தையன்றிப் பதினான்கு சருக்கங்களோடு கூடிய நானூறு திருவிருத்தங்களையுடையது. இது இயற்றியகாலம் இன்னதெனத் திட்டமாகக் கூறமுடியாவிடினும் புலவராற்றுப் படைக்குமுன் பாடப்பட்டது என்று அந்நூலால் விளங்குகிறது.

'பாவியற் றமிழ்தேர் காவியப் புலவர்
கரகம் பிதத்துடன் சிரகம் பிதஞ்செயத்
தேனூற் றிருந்து செவிதொறுங் கனிய
நானூற்றுக் கோவையு நாற்கவி வண்ணமும்
பலர் புகழ் நீடூர்த் தலபு ராணமு
மிருநிலம் புகழு மொருகலம் பகமு
நீடுல குவப்பப் பாடிநிலை நிறுத்துங்
கூறுசொற் கவிதா சாருவ பௌமன்'

என்று புலவராற்றுப்படை கூறுவதுகொண்டு தெளியலாகும்.

மச்சபுராணம் மற்றொன்று. அது வடமொழி மச்சபுராணத்தைப் பின்பற்றியது. இப்பெரும் புராணம் பூர்வகாண்டம் உத்தரகாண்டமென இரண்டு பெரும்பகுதிகளுடையது. நூற்றெழுபத்திரண்டு அத்தியாயங்களும் ஐயாயிரத்தொன்பது திருவிருத்தங்களுமுடையது. வடமொழியிலுள்ள 14000 கிரந்தங்களைச் சுருக்கி ஐயாயிரஞ்செய்யுளாகச் செய்துள்ளார். இப்புராணம்,

மைப்புயல் வண்ணன் மச்சமா யுரைத்த
மச்சமாம் புராணத்தைத் தமிழா
லிப்புவிக் கெண்ணூற் றெண்பத்தி ரண்டா
டிசைந்திடு மவ்விய வருடத்
தைப்பசி மதியி லொப்பிலாத் தினத்தி
லமுதெனக் கனியென வார்க்குஞ்
செப்பிய விரசை வடமலை மகிபன்
செல்வமோ டினிதுவா ழியவே.

என்பதால் கொல்லம் 882-க்குச் சரியான ஆங்கிலவாண்டு 1706-ல் செய்யப்பட்டதாகும்.

புலவராற்றுப்படையிற் காணப்படும் 'கோவை, வண்ணம், கலம்பகம்' முதலாயவை இதுபொழுது கிடைத்தில; அதனானே அவற்றினைக்குறித்து ஒன்றும் சொல்வதற்கில்லை.

இவர் கல்விச்செல்வமும் பொருட்செல்வமுமுடையராயிருந்ததுபோலவே மக்கட்செல்வமுமுடையவராவர். மேலே காட்டிய கால்வழி அட்டவணையினால் இவருடைய குமாரர் நால்வர் என்பது விளங்கும்.

[௯-௧-ஆந் தேதியின் ௧௨௫-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

7. (1) யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியரும் இளம்பூரணவடிகள் முதலியோரும்.

குற்றியலுகரம் நாகு, நாக்கு, வரகு, அரக்கு, அசோகு, தமாக்கு, நக்கு என்றாங்குவரும் நெடிலும், நெடிலொற்றும், குறிலிணையும், குறிலிணையொற்றும், குறினெடிலும், குறினெடிலொற்றும், குற்றொற்றும் ஆகிய எழுவகையிடத்தும் வல்லெழுத்தாறினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வருமென்று பல்காயம் அவிநயம் முதலாய நூன்மதந்தழுவி மேற்கோள்காட்டிப்போந்தார் யாப்பருங்கலவிருத்திகாரர். (யாப்பருங்கல. எழுத். 2. உரை.)

“நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே” (தொல். எழுத். மொழி. 3)

“ஈரெழுத் தொருமொழி யுயிர்த்தொட ரிடைத்தொட
ராய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொட
ராயிரு மூன்றே யுகரங் குறுகிடன்” (தொல். எழுத். நூ. 1)

என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறினார்.

“சார்பிற்றோன்றுந் தன்மையவென்றா” (யாப்பருங்கல. எழுத். 2) என்று அமிதசாகரர் உரைத்துப்போந்தனரேயன்றி ஆறிடமாதல் எழிடமாதல் குறித்திலர். அங்ஙனமாகவும் அதன் விருத்தியுரைகாரர் வழக்காறற்ற பல்காயம் அவிநயம் முதலியவற்றின் மதம்பற்றி எழிடங் குற்றியலுகரத்திற்குக் கொண்டார். அக்கொண்டமைக்குரிய காரணத்தையும் புலப்படுத்திலர்.

தொல்காப்பியச் சூத்திரங்கள் பலவற்றையும் ஆங்காங்கு மேற்கோள்காட்டிச்செல்லு மிவர் தொல்காப்பியத்திலே கொள்ளப்பட்ட ஆறிடத்தையும் இவர் கொள்ளாமைக்கிருந்த காரணத்தையும் புலப்படுத்தினாரில்லை. இதனால் இவர் தமிழ்பயிலும் நல்லுலகமெல்லாம் குற்றியலுகரத்தைச் செவ்வே தெளிந்துகோடற்கியலாது மயக்கிவிட்டார் என்பதும் மிகையாகாது.

இனித் தொல்காப்பியத்திற்கு உரைவகுப்பார் இன்னோரன்ன மயக்கங்களையெல்லாம் நீக்கிலரேல் அன்னோருரைத்தவுரையெல்லாம் வெற்றுரையென்ப தியாங்ஙனம் புனைந்துரையாகும்?

இளம்பூரணவடிகள் குற்றியலுகரத்திற்கு இடம் ஆறென்றே கூறினாரேயன்றிப் பல்காய முதலிய இறந்தமையானே அவை கொண்ட எழிடமென்னும் மதம்பற்றி என்னுங் கூறிற்றிலர்.

"இதனை எழென்றே கொள்வார்க்குப் பிண்ணாக்கு, சுண்ணாம்பு, ஆமணக்கு முதலியன முடியாமையுணர்க" என ஆசிரியர் நச்சினார்க்கினியர் நந்தமிழ்பயிலுமுலகத்திற்கு அமைந்துவந்த மயக்கத்தை யறவே யறுத்துவிட்டார்.

ஆதலின் இளம்பூரணவடிகள் இவ்வியாப்பருங்கலவிருத்தியுரைகாரர்காலத்திற்கு முற்பட்டவராவார் என்று கோடலே சாலப்பொருந்தும்.

(2) யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியரும் மயிலைநாதரும்.

"இவ்வாறு எழிடங்கொள்வார்க்குச் சுண்ணாம்பு ஆமணக்கு பிண்ணாக்கு முதலானவும், ஆய்தந்தொடர்ந்தனவும் அடங்கா வென்றறிக" (நன். எழுத். 39. உரை.) என மயிலைநாதரும் இவரை மறுத்தலின் இவர், மயிலைநாதருக்குக் காலத்தான் முற்பட்டவராவர்.

(3) யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியரும்
யாப்பருங்கலக்காரிகையுரையாசிரியரும்.

யாப்பருங்கலக்காரிகையிற் பத்தாவது செய்யுளுரையிலே "வெண்பாவினோடும் ஆசிரியத்தினோடும் வந்த மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா யாப்பருங்கல விருத்தியுட் 'காமர்கடும்புனல்' என்னும் பழம்பாட்டிற் கண்டுகொள்க" என்று அந்நூலுரையாசிரியராகிய குணசாகரர் கூறியிருப்பதனால் அவருக்குக் காலத்தான் முற்பட்டவர் யாப்பருங்கலவிருத்தியுரைகாரர் என்க.

யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியரைப்போன்றே குணசாகரரும் குற்றியலுகரத்திற்கு எழிடம்கொண்டார். ஆதலின் இவர் இவ்வெழிடத்தைமறுத்த மயிலைநாதர் முதலியோருக்குக் காலத்தான் முற்பட்டவராவர் என்க.

(4) யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியரும் சேனாவரையரும்.

"என்மனார்புலவர் என்பது, என்ப; புலவரெனச் சொல்லுமோ வெனிற் சொல்லும்; என்ப என்பது நிலைமொழி, புலவர் என்பது வருமொழி, மன் ஆர் என்பன இடைச்சொல்; நிலைமொழியீற்றுப் பகரங்கெட்டு என்மனார் புலவரென முடிந்ததாகலின்" என்றார் யாப்பருங்கலவிருத்தியுரைகாரர். (யாப்பருங். தளையோத்து. 26 உரை.)

"என்மனார் என்பது, என்ப என்னும் முற்றுச்சொல்லைக் குறைக்கும்வழிக் குறைத்தல் என்பதனாற் பகரங்குறைத்து விரிக்கும்வழிவிரித்தல் என்பதனான் மன்னும் ஆரும் என்பன இரண்டிடைச்சொற்பெய்து விரித்தான். என்மனார் ஆசிரியர் என்று முடியற்பாற்று" என்று இளம்பூரணரும் கூறினார்.

(தொல். சொல். 1 உரை.)

இதனால் யாப்பருங்கலவிருத்தியுரைகாரருக்கும் இளம்பூரணருக்கும் 'என்மனார்' என்னும் பதமுடிப்புக்கொள்கையிலே வேறுபாடில்லை என்பதறிக.

"என்ப என்னும் முற்றுச்சொல்லினது பகரங்குறைத்து மன்னும் ஆருமென இரண்டிடைச்சொற்பெய்து விரித்தாரென்று உரையாசிரியர் கூறினாரெனின், என்மனாரென்பது இடர்ப்பட்டுழிச் சிறுபான்மை வாராது, நூலுள்ளுஞ் சான்றோர்செய்யுளுள்ளும் பயின்றுவருதலானும், இசைநிறையென்பதுமறுத்துப் பொருள் கூறுகின்றார், பின்னும் இசைநிறையென்றல் மேற்கோண்மலைவாதலானும், அவர்க்கது கருத்தன்றென்க" என்று சேனாவரையர் மறுத்தார்.

இங்ஙனம் சேனாவரையரான் மறுக்கப்பட்டதுவே யாப்பருங்கல விருத்தியுரையாசிரியருக்கு உடம்பாடாதல்பற்றி இவருக்குச் சேனாவரையர் காலத்தாற் பிற்பட்டவராவர் என்க.

8. (1) நுவலாநுவற்சிமுதலியவும் மயிலைநாதரையுள்ளிட்டோரும்.

"ஒட்டெனினும், உள்ளுறையுவமமெனினும், உவமப்போலி எனினும், பிறிதுமொழிதலெனினும் நுவலாநுவற்சி எனினும் ஒக்கும் * *

உள்ளுறையுவமமும் ஒட்டும் உய்த்துணரக்கூறுமிலக்கணத்த வாகலின் ஒன்றும்பிறவெனின், அவ்வாற்றான் ஒன்றுமேயாயினும், புண்முதலிய கருப்பொருள் நிலனாகப்புலப்படும் சிறப்பிலக்கணத்தான் உள்ளுறையுவமமும், யாதானும் ஒத்தவொன்று நிலனாகப் புலப்படும் பொதுவிலக்கணத்தான் ஒட்டும் வேறுமென்றே கோடும். அஃதே; அமைக. அன்றியும், சேற்றுட்டோன்றுவன வெல்லாம் பங்கயமெனப் பெயர்பெறாது வேறுவேறு பெயர்பெறு மாறுபோல உள்ளுறையுவமமெனவும் ஒட்டெனவும் வேறுவேறு பெயர்பெற்றவென்றலும் ஒன்று" என்றார் இலக்கணவிளக்கமுடையார். (இலக்கணவிளக். அணி. 35. உரை.)

ஒட்டு என்பதற்கு நுவலாநுவற்சி, பிறிதுமொழிதல், சுட்டு என்பன பரியாயம். (மாறனலங். பக். 208.)

இக்காட்டியவற்றையுற்றுநோக்கின் உள்ளுறையொழிந்த ஏனைய ஒட்டு, பிறிதுமொழிதல், உவமப்போலி, நுவலாநுவற்சி, சுட்டு என்பன ஒருபொருட்சொற்கள் என்று புலனாதல் தெளிக.

இங்ஙனம் புலப்படவும், பரிமேலழகரை யுள்ளிட்ட பலரும் இவ்வொரே பொருளுக்குச் சொற்போர்புரிவார் ஆயினர். அச்சொற்போரடியாக அவ்வவர் காலத்தையும் ஒருவாறு வரையறைசெய்தல் இயலும் என்பது தெளிந்து ஈண்டுச் சில குறிக்கிறேன்.

(2) பரிமேலழகரும் பிறிதுமொழிதன் முதலியவும்.

"எளியரென்று பலரோடு பகைகொள்வான் தான் வலியனே ஆயினும், அவர் தொக்கவழி வலியழியும் என்னும் பொருள் தோன்ற நின்றமையின் இது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம். இதனை நுவலாநுவற்சி என்பாரும் ஒட்டென்பாரும் உளர்" என்றார் பரிமேலழகர். (திருக்குறள். அதி. 48. 5 உரை.)

பிறிதுமொழிதலென்னும் பெயர்தந்தார் இவரும் சேனாவரையருமே ஆவார் என்பது அறிந்தவரையில் ஆராய்ந்து தெளிந்து கொண்டதொரு முடிபாகும்.

'சேனாவரையரும், 'தெரிபுவேறுகிளத்தலும்' (தொல். சொல். பெயர். 3) என்னுஞ் சூத்திரவுரையிலே குறிப்பிற்றோன்றலுக்கு உதாரணமாக "இளைதாக" (திருக்குறள். அதி. 48. 5) என்னுங் குறளைக் காட்டினார்; காட்டினவர் "அணியிலக்கணங் கூறுவார்

இன்னோரன்னவற்றைப் பிறிதுமொழிதலென்ப" என்றுங் கூறினர். இலக்கணவிளக்கமுடையாரும் இவர்கூற்றையே மேற்கொண்டுரைத்துப்போந்தார். (இலக்கணவி. பெயரி-12. உரை.)

இதனானே பிறிதுமொழிதல் என்று அணிப்பெயர்கூறுதல் தம்மதமன்றென்றும் பிறர்மதமேயாமென்றுஞ் சேனாவரையர் விளக்கிப்போந்தார்.

நம்மொழிக்குள்ளே அணியை விளக்கும் நூல்களாக அணியியல், வீரசோழியம், தண்டியலங்காரம் என்னு மிவைகளே பழங் காலத்திலுள்ளன என்பது நம்மனோரெல்லாரும் இதுகாறும் அறிந்துவைத்ததோ ருண்மையாகும்.

"உருவகமும் * * * * நுவலாநுவற்சியும் * * * * என்றோதப்பட்ட அலங்காரங்களும் என்றவாறு. அவை அணியியலுட் கண்டுகொள்க" (யாப்பருங்கல. ஒழிபி. மாலைமாற்றே என்னுஞ் சூத்திரவுரை.) என்று யாப்பருங்கலவிருத்தியுரைகாரர் கூறுதலின் அணியியலுள்ளே கொள்ளப்பட்டது நுவலாநுவற்சி என்பது புலனாகின்றது.

இங்ஙனம் புலனாகவும், பரிமேலழகர் பிறர்மதமாகக் கூறிய நுவலாநுவற்சியும், ஒட்டும் வீரசோழியத்திலும் தண்டியலங்காரத்திலும் காணப்பட்டபோதிலும் அவர் தன்மதமாகக்கூறிய பிறிது மொழிதலென்பது அணிநூலிட் கண்டதாகவிருந்தாலும் இருக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள்.

அணிநூலிலே நுவலாநுவற்சி என்பதுவே கொள்ளப்பட்டதென்பது மேலே காட்டப்பட்டது. ஆதலிற் பிறிதுமொழிதல் என்பது அவ்வணிக்குப் பரியாயப்பெயராக வருமென்பது அவ்வணிநூலுக்குத் துணிபாகுமேல் ஒட்டணிப்பொருளுக்கு இத்துணைச் சொற்போர் நிகழுதல் எற்றுக்கென்க.

சேனாவரையரும், இலக்கணவிளக்கமுடையாரும் அணியிலக்கணங் கூறுவார் என்றதை அணிநூலென்று உரைசெய்தல் பொருந்தாதென்க. பிறிதுமொழிதலெனக் கூறியதொருநூல் இல்லாமையின் இலக்கியங்களிலே அணியிலக்கணத்தை யமைத்துக்

கூறுபவர் என்றுரைத்தலே பொருந்தும் என்க. இங்ஙனமுரையாக்கால் இலக்கணவிளக்கமுடையாரும் அணிநூலைக் கண்டுள்ளார் என்பது பட்டு அவரது பாயிரமுதலியவற்றோடு முரணுமென்று விடுக்க. வேண்டுமேற் பின்னர் ஈது விரிக்கப்படும்.

ஒட்டு, நவலாநுவற்சி என்னு மிப்பெயர்களைநீக்கிப் பிறிதுமொழிதலையே பலவிடத்தும் நாட்டியவர் பரிமேலழகராதலின் சேனாவரையரான் 'அணியிலக்கணங்கூறுவார் இன்னோரன்னவற்றைப் பிறிதுமொழிதலென்ப' எனச்சுட்டப்பட்டவர் பரிமேலழகரே யாவர் என்பது வடித்தெடுத்துக்கொண்டதொருமுடிபாகும்.

ஒருநூலுக்கு உரையெழுதுதல் அந்நூல்கற்றற்கண்ணே நிகழும் ஐயம்பலவற்றையும் நீக்குதற்கன்றே? அங்ஙனமாகவும் அம்மயக்கந்திராவுரையாசிரியர் உரையாசிரியரெனப்படார் என்பது ஒருதலை.

தொல்காப்பியத்து வினையியலுள்ளே நிலனும் பொருளும் என்னும் முப்பத்தேழாஞ்சூத்திரவுரையிலே, சேனாவரையர், "நின்முகங்காணுமருந்தினேன் (குறிஞ்சிக்கலி 24) என்புழிக் காட்சியை மருந்தென்றாராகலிற் காணுமருந்தென்பது வினைப்பெயர்கொண்டதாம்;'பொச்சாவாக்கருவியாற்போற்றிச்செயின்'(குறள். 537) என்பதும் அது" என்று இலக்கணமமைத்தும் பொருள்கூறியுஞ் சென்றார்.

கலித்தொகைக் குரைவகுத்த உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் "காணும்" என்றதற்குச் சேனாவரையர் உரைத்தாங்கு உரைகூறிச் சென்றாராதலின் அவர் அந்நூலைக் கற்பவருக்கெல்லாம் விளங்கவைத்தவராவர்.

திருக்குறளுக்குரைவகுத்த பரிமேலழகரோ, பொச்சாவாக்கருவி என்பதற்குப் பொச்சாவாதமனத்தானே என்று பொருள் செய்து பொச்சாவாத என்பதனிறுதிநிலை விகாரத்தாற்றொக்கதென்று விசேடம் கூறியும் சென்றார். ஆதலின் அக்குறள் கற்குமாணாக்கர், சேனாவரையர்கூற்றுப் பரிமேலழகர்கூற்றோடுமுரணுதலானே இக்குறளுக்கு மெய்ப்பொருள் காண்கிலாராவர்.

இங்ஙனமெல்லாம் அறியாது மயக்கவைத்தார் என்று பரிமேலழகருக்குக் குற்றமேற்றுதல் அறியாமைப்பாலதாம். ஆதலிற் சேனாவரையர்காலத்திற்கு முற்பட்டவர் பரிமேலழகர் என்று கோடலே பல்லாற்றானும் பொருந்துமென்க.

(3) பரிமேலழகரும் புறநானூற்றுரையாசிரியரும்.

"கால்பார்கோத்து என்னும் புறப்பாட்டாகிய இஃது உலகாளும் முறைமை கூறுதலையுட்கொண்டு சகடஞ்செல்லுமாற்றைக் கூறினமையின் நுவலாநுவற்சி என்னும் அலங்காரமாயிற்று. ஒட்டென்று கூறுவாரும் உளர்." என்றார் புறநானூற்றுரையாசிரியர்.

இவர் நுவலாநுவற்சியைத் தன்மதமாகவும் ஒட்டென்பதைப் பிறர்மதமாகவுங்கொண்டு கூறுதலின் நுவலாநுவற்சி ஒட்டு என்றுரைத்தார் காலத்திற்குப் பிற்பட்டவராவர்.

ஒட்டென்றவர் தண்டியலங்கார நூலுடையார். நுவலாநுவற்சியென்றவர் அணிநூலுடையாரும் வீரசோழியமுடையாரும் ஆவர். இம்மூவருக்கும் காலத்தாற் பிற்பட்டவர் புறநானூற்றுரையாசிரியராவர்.

அன்றியும் இவர் பிறர்மதம் உணர்த்தும்போது பிறிதுமொழிதலைக் கூறாது விடுத்தனர். ஆதலிற் பரிமேலழகருக்குக் காலத்தான் இவர் முற்பட்டவராவர்.

(4) தண்டியாசிரியரும் மயிலைநாதரும்.

"பீலிபெய்சாகாடு" (திருக்குறள் 48 அதி. 5. உரை) என்னும் இச்செய்யுள் முதலிய அணியை "நுவலாநுவற்சியென்ப" என்றார் மயிலைநாதர். (நன். பொது. 9. உரை.)

"நுவலாநுவற்சி என்ப" என்று பிறன்கோளைத் தாங்கொண்டு கூறுதலின் அந்நுவலாநுவற்சி யென்றவர்கள் அணியியலாரும் வீரசோழியமுடையாருமாவராதலின் அவ்விருவருக்குங் காலத்தான் இவர் பிந்தியவராவர்.

இன்னும் இவர், ஒட்டுமுதலிய பிறமதங்களைக் கூறிற்றிலர்; ஆதலின் அக்கூறிய தண்டியலங்காரநூலுடையார்காலத்திற்கும் இவர் முந்தியவராவர்.

இதுகாறும் கூறியவற்றான் அணியியனூலாருக்கும்வீரசோழிய நூலாருக்குங் காலத்தாற்பிந்தியவர் மயிலைநாதர் என்பதூஉம், மயிலைநாதருக்குக் காலத்தாற்பிந்தியவர் தண்டியலங்கார நூலுடையார் என்பதூஉம், அத்தண்டியலங்கார நூலுடையாருக்குக் காலத்தாற் பிந்தியவர் புறநானூற்றுரையாசிரியர் என்பதூஉம், அப் புறநானூற்றுரையாசிரியருக்குக் காலத்தால் பிந்தியவர் பரிமேலழகர் என்பதூஉம், அப்பரிமேலழகருக்குக் காலத்தாற் பிந்தியவர் சேனுவரையர் என்பதூஉம் விளக்கப்பட்டனவென்க.

(9) வீரசோழிய வுரையாசிரியரும் பிரயோகவிவேகநூலாசிரியரும்.

வீரசோழியவுரையாசிரியராகியபெருந்தேவனார் வீரசோழியத்திலே, உபகாரகப்படலத்திலே வரைநின்றிழிந்தென்னுங் காரிகையுரையிலே,

"இந்திரன் றமரை யைக்கரத் தாற்கொய் திறைவனுக்குத்
தந்திருங் குற்றத்தி னீங்கிவிண் மேலிருந் தானெனலும்
வந்தன காரகமெல்லாம் வகுத்த வழிமுறையே" என்றார் பிறரும்

என்று கூறியுள்ளார்.

ஈண்டுக்கூறிய காரிகையின் மூன்றாமடியிலே சிறிது திரிபுற்ற காரிகையானது பிரயோகவிவேகத்திலே காரகப்படலத்திலே அறுவகைக்காரகத்திற்கும் உதாரணக் காரிகையாக அமைந்துள்ளது.

இத்திரிபு எழுதுவோர்ானிகழ்ந்ததென்று இவ்விரண்டு நூல்களையும் ஒருங்குவைத்துக் காண்பார்க்குச் செவ்விதிற் புலனாகும். ஆகலபற்றி இவ்விரண்டிடத்துங் காட்டப்பட்ட காரிகையும் ஒன்றாகுமென்பது கூறாமேயமையும்.

பிரயோகவிவேகத்திலே உள்ளதாகிய "இந்திரன்றமரை" என்னுங் காரிகையைப் பெருந்தேவனார் மேற்கோளாகக் காட்டினாராதலின், இப்பெருந்தேவனார்க்குக் காலத்தான் முந்தியவர் பிரயோகவிவேக நூலுடையாராவர்.

[தொடரும்.]

க. சு. நவநீதகிருஷ்ணபாரதி.

யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

(௩௭௫-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கல்லியநாட்டு யுத்தம்.

கைசர் கல்லியயுத்தவரலாற்றை எளியநடையிற் சிறுவர்கற்றற்குரிய நூலாக எழுதினான். கல்லியருடைய ஆசாரம் பழக்கம் தெய்வவணக்கம் மணமுறை போர்முறை அரசியன்முறை முதலியவற்றைப்பற்றி அந்நூல் கூறுகின்றது. அது, கைசர் சாமபேததான தண்டத்தாலும் தன் வீரத்தாலும் கல்லியரை அடக்கினான் என்கின்றது. கெல்வித்தியரைக் கிம்பிரியர் நெருக்க, அவர்கள் மேன்மக்கட்சபையிடம் துணைவேண்டினார்களாக, சபை கடத்தியதாகையால் கெல்வித்தியர் தம்நாடுதுறந்து பிறநாடுகளுக்கு ஏகினார்கள். கிம்பிரியர் இத்தாலியாவினுள் புகுவரென்று உரோமர் அஞ்சினர். உரோமர்சபை கிம்பிரியரைத் துரத்தும்படி கைசரை ஏவிற்று. கிம்பிரியர் யுருமலையை அடைந்து செக்குபினியநாட்டுக்கூடே செல்லக் கைசர் படையொடு கடிதுசென்று பிபிறூற்றி நகர்க்கணிமையில் கிம்பிரியரோடு பொருது வென்றான். சர்மானியக் கூட்டத்தினர் ரையின் நதியைக் கடந்தனராக, கைசர் அவர்களை ஓட்டித் துரத்தினன். கி. மு. 57-ம் ஆண்டு பெல்காயிநகர்க் கல்லியர் 40,000 படையினைச் சேர்த்துக்கொண்டு போர்க்கெழுந்தனரென்பதைக் கைசர் கேள்வியுற்று ஆங்குச்சென்று ஒருசாதியாரை ஒருசாதியார்க் கெதிராகப் பேதப்படுத்திக் கல்லியரை அடக்கினான். கல்லியநாட்டு வடபாகத்தில் வசிக்கும் வெனீரியர் கடல்வீரராகையால் கைசர் கப்பற்படைசேர்த்துச்சென்று அவர்களை அட்டுப் பலரை அடிமைகளாக்கி விற்றனன். இங்ஙனம் கல்லியநாடு உரோமரது ஆட்சிநாடாயிற்று.

பிரித்தானியத் தீவார் கல்லியருக்குத் துணைபுரிந்தமையால் அவரைத் தண்டித்தற்கே கைசர் கடல்கடந்து கி. மு. 54-ஆம் ஆண்டு டீவன் கரையில் இறங்கினான். கப்பல்களைக் கண்டவுடன் பிரித்தானியர் கடற்கரையில் திரண்டுசூழ்ந்தனர் என்றும் உரோமக் கடல்வீரர் கப்பல்களினின்றும் இறங்கவே அஞ்சினாராக,

கழுகுக்கொடிவீரன் பரவையில் குதித்தானென்றும் குதித்த வுடன் கழுகுக்கோலைக் காத்தற்கு வீரர் யாவரும் குதித்து உவரி யில் கடும்போர்புரிந்து பிரித்தானியரைக் கலைத்தனரென்றும் கைசர் எழுதிய வரலாறு செப்புகின்றது. பிரித்தானியர் மூர்க்க ராகையாலும் கானவராகையாலும் அவர்களது நாடு திரவியந் தேடற்குரிய நாடன்றாதலாலும் கைசர் கல்லியநாட்டிற்குத் திரும் பினன். அக்காலத்திற் பிரித்தானியர் மரவுரி தோலுரியுடைய எயினராகவும் ஆடையற்ற கானவராகவும் காடுகளிலும் குன்றுகளி லும் வசித்துக் குருவீச்சைத் தொழுதனர் என்று கைசரின்வரலாறு கூறுகின்றது. எங்ஙனமாயினும், பிரித்தானியாதேசத்தோரும் அவர்க்கு அணியரான கல்லியரும் ஓரினச்சாதியினராவர். பிரித் தானியருக்குச் செம்புருக்கத் தெரியுமென்றும் கல்லியரது சமயக் கிரியைகளையே அவரும் கைக்கொண்டொழுகினரென்றும் தெரி கிறது. கல்லியரைப்போல் பிரித்தானியரும் தேர்ப்போரில் வீரரா யிருந்தனர். நாடு நகரங்கள் பிரித்தானியாவில் இல்லையெனவும் கைசர் மொழிந்தனன். கைசர் தேம்ஸ்நதிப்போரில் கசிவிலானஸ் என்னும் வீரனைச் சயித்துப் பின் கல்லியாவுக்குத் திரும்பினன். ஐடுபி என்னும் கல்லியசாதித்தலைவன் டிவிற்றியாக்கஸ் என்பான் உரோமர்பக்கத்தைச் சார்ந்தானாக, அவன் தம்பி டும்னேறிக்கு என்போன் உரோமரோடு உட்பகையாகியதைக் கைசர் அறிந்து அவனைச் சிரச்சேதஞ்செய்வித்தனன். இதுநிற்க. கைசரின்படை கள் கூதிர்க்காலத்தில் ஆங்காங்கே பாசறைகளில் பிரிந்திருந்ததை உணர்ந்த பெல்காயி நகர்க் கல்லியர் உரோமரைத் துரத்தற் குத் தருணம்வாய்த்ததெனக் காலந்தாழ்க்காது போர்க்கெழுந் தனர். எபிரானியர்தலைவன் அம்பியோறிக்கு என்போன் சபினஸ் கொற்று என்னும் உரோமர்தலைவனுக்குக் கைசரின் பாசறைக்குச் செல்ல உதவிசெய்வான்போல வழிகாட்டிச்சென்று காடடர்ந்த தோர் பள்ளத்தாக்கில் தன் படையாற் சூழ்ந்து உரோமருடைய படை முழுவதையும் அழித்தான். அஃதன்றிச் சிசரோவின் தம்பி குயின்றஸ் சிசரோவையும் இவ்வண்ணம் ஏமாற்ற முயன்றனன். கைசர் இச்செய்திகளை அறிந்து துணைப்படையோடு முடுகினன். இலபியேனஸ் என்னும் தலைவன் தெரிவேறியர் என்னுங் கல்லிய ரோடு பொருது வென்றான். கைசர் வடக்குக் கல்லியரை ஒருவாறு அடக்கினனாக, மத்திய கல்லியர் வேர்கிங்கிற்றோரிக்கு என்னும்

தலைவன்கீழ்ப் போர்க்கெழுந்தனர். அவன் உரோமர்படைகளுக்கு உணவில்லாமல்பண்ணுதற்கு வயல்களையும் தானியமாடங்களையும் பண்டசாலைகளையும் ஊர்களையும் தீயிட்டு அழித்தான். கல்லிய வீரருக்கு அவனது உபாயம் யாதெனத் தெரியாமையால் அவிகந்தம் என்னும் நகரை அழிக்கவிடாது கலகப்பட்டனர். வேர்கிங்கிற்றேறிக்குக் கேர்கோவியா நகரத்தை அடைந்திருந்தான். ஐடுயி அவர்களுக்குத் துணைசெய்தான். இலாபியேனஸ் படையோடு கைசரின் உதவிக்குச் சென்றான். கைசர் கல்லியரைச் சயித்து உரோமரது ஆட்சியை நாட்ட ஒழுங்குகள்செய்தான். இத்தாலியாவிலே குளோடியஸ் இறந்ததையும் பம்பீ தனித்தலைவனாக அதிகாரத்தைச் செலுத்துதலையும் முன்னரே அறிந்தமையாலும் கல்லியரை அடக்கி முடிந்தவுடன் கைசர் இத்தாலியாதேசத்திற்குப் புறப்பட்டான். கைசர் தன் படையோடு உரோமாபுரத்திற்குச் சென்று தனது தலைமையை நாட்டுதற்கு எண்ணினான்.

உண்ணாட்டுக்கலகம்.

கி. மு. 54-ம் ஆண்டு கைசரின் மகள் (பம்பீயின்மனைவி) மரித்தனள். கிறாசஸ் கர்காயிப்போரில் மடிந்தான். கைசர் கல்லியரை அடக்கினான். மூவர் கூட்டம் குலைந்ததெனலாம். பம்பீயும் மேன்மக்களும் மனமொத்தனராகிக் கைசரின்வலியைக் கெடுக்க முயன்றனர். கேற்றோவும் பம்பீகட்சியைச் சார்ந்தானாகலின், கைசர் தன் கல்லியநாட்டுத்தலைமைக்கு வரையப்பட்டகாலமுடிவில் தன்னை எதிர்க்கட்சியார் அடக்கமுயல்வாரென நம்பினான். சுல்லாவின் பிரமாணத்தின்படி கைசர் பத்துவருடத்திற்கு இணைத்தலைவனாகத் தெரிவுபெறவியலாதென அறிந்து தன்னை இலிறியா தேசத்திற்குத் தேசாதிபதியாக்கும்படிவேண்டினான். மாக்கேலஸ் என்பான் இணைத்தலைவரில் ஒருவனானான். அவன் கைசரைப் படையைக் குலைக்கும்படி ஏவினான். இங்ஙனம் அடுத்த தெரிவுகாலம்வரையும் கைசர் சாதாரண மனிதனாக இருக்கவேண்டும். ஆதலால் கைசர், தன் நண்பன் அந்தோனியோவைக் காவலனுக்குரிய உரிமையைச்செலுத்தி மாக்கேலஸ் என்னும் தலைவனின் தீர்மானத்தைத் தடுக்கும்படி தூண்டினான். அந்தோனியோ அங்ஙனந்தடுக்க, மேன்மக்கள் கலகம்விளைகாலமாதலால் பிரமாண நீதியை நிறுத்திப் போர்க்காலத்துப் படைநீதியே செலுத்தப்படு